விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26
ஒலி 358 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 26 வெள்ளிக்கிழமை (12.12.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## யாழில் கடற்படையின்
# பயன்பாட்டிலுள்ள
# மக்கள் காணி விடுவிப்பு

### அரச அதிபரிடம் வடபிராந்திய கடற்படைத் தளபதி

*(யாழ்ப்பாணம்)*

யாழில்கடற்படையின்பயன்பாட்டில் உள்ள பொதுமக்களின் காணி விடுவிக்கப்படும் என வட பிராந்திய கடற்படைத் தளபதி றியல் அட்மிரல் லியன கமகே தெரிவித்துள்ளார். *(04ஆம் பக்கம் பார்க்க)*



## கலா ஓயா வெள்ளத்தில் மரணித்த யாழ்.இளைஞனுக்கு
### முதற்கட்ட நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

சமீபத்தில் கொழும்பு நோக்கிப் பயணித்த பேருந்து கலா ஓயாப் பகுதியில் வெள்ளத்தில் சிக்கியபோது, தனது உயிரைப் பணயம் வைத்து மற்றவர்களின் உயிரைக் காக்க உதவிய யாழ்ப்பாண 15ஆம் பக்கம் பார்க்க

## வழிபாட்டுத் தலங்களை துப்புரவு செய்ய
### ரூபாய் 25 ஆயிரம் ஒதுக்கீடு

(கொழும்பு)

பேரிடர் காரணமாக அனர்த்தத்திற்குள்ளான அனைத்து வழிபாட்டுத் தலங்களையும் துப்புரவு செய்து, வழமைக்குக் கொண்டுவர அரசாங்கம் தீர்மானித்துள்ளது. 15ஆம் பக்கம் பார்க்க

## நிவாரண நிதியைப் பெற்றுக் கொள்ள அரசியல் தலையீடுகள் இருக்காது
### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

அனர்த்த நிவாரண நிதியை பெற்றுக் கொள்வதற்கு எவ்வித அரசியல் தலையீடுகளும் இருக்காது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பின் போது எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதில் வழங்கிய அமைச்சர் நளிந்த 02ஆம் பக்கம் பார்க்க



## மன்னார் மாவட்டத்தில்
## இரு காற்றாலை அமைக்க அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் இரு காற்றாலை அமைக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வலுசக்தி அமைச்சர் குறித்த யோசனையை அமைச்சரவையில் சமர்ப்பித்தார்.

அதில் மன்னார், முள்ளிக்குளம் பிரதேசத்தில் த ல ா 15ஆம் பக்கம் பார்க்க

## தீ விபத்துக்குள்ளான ஆசிரியை மரணம்



(யாழ்ப்பாணம்)

தீ விபத்தில் எரிகாயங்களுக்குள்ளான ஆசிரியை 15ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையை மீண்டும் கட்டியெழுப்ப உதவிகளை பெற்றுக் கொடுக்கத் தயார்
### ஜனாதிபதியிடம் அமெரிக்க உப இராஜாங்க செயலாளர்

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் தலைமையில் இலங்கை மீண்டும் கட்டியெழுப்பப்படும் என்றும் அதற்குத் தேவையான எந்த உதவியையும் வழங்க அமெரிக்கா தயாராக உள்ளது என்றும் அமெரிக்க அரசியல் விவகாரங்கள் தொடர்பான உப 04ஆம் பக்கம் பார்க்க



## கிணற்றடியில் தவறிவிழுந்த இளைஞன் உயிரிழப்பு

(கரணவாய்)

கிணற்றடியில் தவறி விழுந்த இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மாங்குளம் ஒலுமடுப் 15ஆம் பக்கம் பார்க்க

## பள்ளத்தில் தவறிவிழுந்த மாணவன் உயிரிழப்பு



(மன்னார்)

மன்னாரில் நீர் நிரம்பிய பள்ளத்தில் தவறுதலாக விழுந்த 15ஆம் பக்கம் பார்க்க

## அரச சேவையில் 2,284 ஆட்சேர்ப்புக்கு அமைச்சரவை அனுமதி

05ஆம் பக்கம் பார்க்க

## பேரிடரால் கடுமையாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு
### புதிய சலுகைக் கடன் திட்டம்

(கொழும்பு)

பேரிடரால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு புதிய சலுகை கடன் திட்டத்தை செயற்படுத்த அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

நுண், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை மறுவாழ்வு செய்வதற்காக இந்தக் கடன் திட்டத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க



## பொலிஸ் உத்தியோகத்தர் ஆட்டோ விபத்தில் பலி

(கரணவாய்)

அம்பாறை மாவட்டம் திருக்கோயில் பகுதியில் இடம் 15ஆம் பக்கம் பார்க்க

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கை பார்வையற்றோருக்கான அறக்கட்டளை நிலையத்தினால் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தையொட்டி இடம்பெற்ற அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்**

**அதிர்ஷ்ட சாலிகளிற்கான இலக்கங்கள்**

1ம் பரிசு – 15875 2ம் பரிசு – 16302

3ம் பரிசு – 27522

**ஆறுதல் பரிசில்கள்**

| | |
|---|---|
| 01.23520 | 06.5861 |
| 02.23801 | 07.6819 |
| 03.5522 | 08.4596 |
| 04.6522 | 09.6890 |
| 05.29651 | 10.695 |

(6135)

## நிவாரண ...

ஜயதிஸ்ஸ இந்த விடயத்தைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அனர்த்த நிவாரணத்தைப் பெற்றுக் கொள்வதற்கான படிவத்தில் அரச அதிகாரிகளின் சான்றுப்படுத்தல் மாத்திரமே தேவைப்படுவதாகவும் அதில் அரசியல் வாதிகளின் எவ்வித பரிந்துரைகளும் அவசியப்படாது எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இந்த நிலையில் அரசாங்கத்தின் செயற்பாடுகளைக் குறைகூறும் ஒருசில தரப்பினரால் இவ்வாறான வதந்திகள் சமூகத்திடையே பரப்பப்படுவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

குறிப்பாக கிராம சேவையாளர்களுக்கான சங்கம் ஒன்றைச் சேர்ந்த ஒரு சில உத்தியோகத்தர்களும் இது போன்ற பொய் வதந்திகளைப் பகிர்வதாகவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன்படி கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் நிவாரண சேவை அதிகாரி ஆகியோரின் ஒப்புதலுடன் பிரதேச செயலாளர் ஊடாக மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம-7)


## வாழ்நாள் பேராசிரியர் வே.தர்மரட்ணம் காலமானார்



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும் வாழ்நாள் பேராசிரியருமான வேலுப்பிள்ளை தர்மரட்ணம் நேற்று (11) வியாழக்கிழமை காலமானார்.

யாழ்ப்பாணம் காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளை தர்மரட்ணம் கணிதவியல் ஆராய்ச்சி மற்றும் உயர்கல்வித்துறையில் பல தசாப்தங்களாகப் பணியாற்றிய ஒரு சிறந்த அறிஞராவார். (ம-7)


## கிழவன்காடு கலாமன்றத்தின் கண்ணீர்ப் பூக்கள்



எமது கலாமன்றத்தின் போசகராக சேவையாற்றிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் கலாநிதி

**அமரர் வேலுப்பிள்ளை தர்மரட்ணம்**

அவர்களின் மறைவுத் துயர் அறிந்து அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர தில்லைக்கூத்தன் திருவடிகள் சேரப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும் -

நிர்வாக சபையினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் (C-4552)

கிழவன்காடு கலாமன்றம் காரைநகர் - யாழ்கிளை

## 111வது பிறந்ததின நினைவுகூரல்



**அமரர் சாள்ஸ் ஆறுமுகம் சின்னத்தம்பி**

மண்ணில் : 12.12.1914

விண்ணில் : 04.08.1993

அன்புடன் வாழ்த்தி நினைவுகூருவோர்

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் (C-4549)


## மரண அறிவித்தல்

பிறப்பு 08 - 11 - 1981



இறப்பு 10 - 12 - 2025

## நிஷாந்தினி நித்திலவர்ணன்

ஐயனார் வீதி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. நிஷாந்தினி நித்திலவர்ணன் (ஆசிரியை, யா/ஹாட்லிக் கல்லூரி) அவர்கள் கடந்த (10.12.2025) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் ஜெயவசீகரன்(ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர்)- விஜயராணி தம்பதியினரின் மூத்த புதல்வியும் ஆனந்தமயில் - நகுலேஸ்வரி தம்பதியினரின் மருமகளும் கலாநிதி. ஆ. நித்திலவர்ணன் (துறைத்தலைவர், கல்வியியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) அவர்களின் அன்பு மனைவியும் தக்ஷனா (மாணவி, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), கிருஜன் (மாணவன், யா/ஹாட்லிக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் நிரோஜினி அவர்களின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (12.12.2025) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் ஐயனார் வீதி, பருத்தித்துறையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, காலை 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

077 900 7554

077 868 9528

(C-4550)

## 5 ஆம் ஆண்டு நினைவுகளுடன்...

அன்னை மடியில் 06 - 02 - 1959



இறைவன் அடியில் 07 - 11 - 2020

**அமரர் திருமதி லின்ரா சந்திரலிங்கம்**

**திதி : அபரபக்க தேய்பிறை அட்டமி**

எத்தனை ஆண்டு கடந்தாலும்
உங்கள் நினைவுகள் நீங்காதம்மா!
எம்மைத் தாலாட்டிச் சீராட்டி வளர்த்த
எங்கள் குல தெய்வமே!
அன்புடனும் பண்புடனும் பழகச்
சொல்லித் தந்த தாயே!
எமக்கு நல்லறிவைக்
கொடுத்து வளர்த்த ஆசானே!
இன்று உங்கள் அரவணைப்பின்றி
உங்கள் பிரகாசமான ஒளிப்படத்தை
முன்னிறுத்தி நெஞ்சில் ஆறாத
வேதனைகளுடனும் என்றும் மாறாத
நினைவுகளுடனும் தொடர்கிறோம் எம் வாழ்வை

(6130)

கட்டப்பிராய், கோப்பாய் தெற்கு.

என்றும் நினைவுகளுடன் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் மீட்பு முயற்சிகளுக்காக

# 35 மில்லியன் டொலர்களை திரட்டும் ஐ.நா



(கொழும்பு)

**இலங்கையின் மீட்பு முயற்சிகளை ஆதரிப்பதற்காக, அடுத்த நான்கு மாதங்களில் 35 மில்லியன் அமெரிக்க டொலர்களைத் திரட்ட ஐக்கிய நாடுகள் சபை உள்ளூர் மற்றும் சர்வதேச பங்காளிகளுடன் இணைந்து முயற்சித்து வருவதாக, இலங்கையில் உள்ள ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க்-ஆண்ட்ரே ஃபிராஞ்ச் தெரிவித்தார்.**

நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது உரையாற்றிய அவர், டித்வா சூறாவளி நாடு முழுவதும் அழிவுப் பாதையை ஏற்படுத்திய பின்னர், ஐ.நா. பேரிடர் மேலாண்மை மையத்துடன் இணைந்து ஏழு துறைகளை உள்ளடக்கிய முன்னுரிமைப் பட்டியலைத் தயாரித்துள்ளதாகத் தெரிவித்தார்.

அவுஸ்திரேலியா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம், சுவிட்சர்லாந்து, ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் வழங்கிய ஆதரவுடன், இந்த முயற்சிக்காக ஐ.நா ஏற்கனவே 9.5 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றுள்ளது என்று ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க்-ஆண்ட்ரே ஃபிராஞ்ச் குறிப்பிட்டார்.

ஒருங்கிணைந்த திட்டத்துடன் வரும் மாதங்களில் மேலும் 26 மில்லியன் அமெரிக்க டொலர்களை திரட்ட அவர்கள் முயற்சிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஙி)

# பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு மேலதிக சீருடைகள்

(கொழும்பு)

அனர்த்த நிலைமை கார ணமாக பாதிக்கப்பட்ட மாண வர்களுக்கு மேலதிக பாடசா லைச் சீருடைகளை வழங்கும் திட்டத்தின் கீழ் சீருடை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயத்தை கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ தெரிவித்துள் ளார்.


பாடசாலைகள் டிசம்பர் 16 ஆம் திகதி திறக்கப்படவுள்ள நிலையில், சீருடை இல்லாத மாணவர்களுக்கு பொருத்தமான உடையில் பாடசாலைக்கு வர அனுமதி வ்ழங்கப்பட்டுள்ளது.

அனர்த்த நிலைமை கார ணமாக பாதிக்கப்பட்டுள்ள 5 இலட்சம் பாடசாலை மாணவர் களில் சுமார் 50 வீதமானோருக்கு சீருடைக்கான தேவை இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உரிய அதி காரிகள் ஆய்வுகளை மேற் கொண்டு வருவதாகவும், அதன்படி பாதிக்கப்பட்ட மாகாணங்களில் உள்ள சுமார் இர ண்டரை இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு மாகாண மட் டத்தில் இந்த மேலதிகச் சீரு டைத் தொகுதியை வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வுள்ளது என்றும் அமைச்சு செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் உரிய ஊழியர்களின் உடை விடயத்திலும் நெகிழ் வான கொள்கையைப் பின்பற்ற தற்போது தீர்மானிக்கப்பட்டுள் ளது என்றும் செயலாளர் மேலும் தெரிவித்தார். (ஙி)

# அனர்த்தத்தால் வீதிகளில் குவியும் பழுதடைந்த பொருட்கள்



(நுவரெலியா)

அனர்த்தம் காரணமாக பலகோடி ரூபா பெறுமதியான பழுதடைந்த உணவுப் பொருட்கள் கம்பளை, கெலிஓயா, கஹப்பிட்டிய முதலான பகுதிகளில் உள்ள பிராதன வீதிகளில் குவிந்துள்ளன.

அவற்றை அகற்றுவது கூட பாரிய சிரமமாக உள்ளதாகத் தெரியவருகிறது. பல்லாயிரக்கணக்கான தொன்கள் எடை கொண்ட இப்பொருட்களை எங்கு எடுத்துச் செல்வது? எங்கே கொட்டுவது என்பன கூட பாரிய சவாலாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரிசி, மா, பருப்பு, வெங்காயம், மருந்துப் பொருட்கள், கட்டடப் பொருட்கள், ஆடை அணிகள், வீட்டுத்தளபாடங்கள் என விதம் விதமான பொருட்கள் பழுதடைந்து வீதிகளில் அநாதரவாகக் காணப்படுகின்றன. இவற்றை பயன்படுத்த முடியாதுள்ளது. (ஙி)

# டித்வா சூறாவளியின் தாக்கம்; பால் உற்பத்தி வீழ்ச்சி

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்ட சீரற்ற வானிலையை அடுத்து, பால் உற்பத்தி குறைவ டைந்துள்ளதாக தேசிய கால்நடை மேம் பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, ஒரு நாளைக்கு 2,000 லீற்றர் பால் உற்பத்தி குறைந்துள்ளதாக அந்த பணி யகம் சுட்டிக்காட்டியுள்ளது.

டித்வா சூறாவளியால் ஏற் பட்ட வெள்ளத்தால், சிலாபம் பகுதியில் உள்ள பால் உற்பத்தி நிலையம் ஒன்று கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது.

எனினும் குறித்த பகுதியில் கால் நடைகளுக்கு அதிக சேதம் ஏற்பட வில்லை என்றும் தேசிய கால்நடை மேம்பாட்டு பணியகம் குறிப்பிட்டுள்ளது. (ஙி)

# அனர்த்தத்தில் காணாமல் போன 203 பேருக்கு மரணச் சான்றிதழ்

## பதிவாளர் நாயகம் அறிவிப்பு

(கொழும்பு)

டித்வா சூறாவளியால் ஏற் பட்ட வெள்ளம் மற்றும் மண் சரிவுகளில் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்ட 203 நபர்களுக்கு மரணச் சான்றிதழ்கள் வழங்கப்படும் எனப் பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவித்துள்ளது.

திடீர் அனர்த்தம் ஏற்பட்டு இரண்டு வாரங்களுக்குப் பின்னரும் ஒரு நபர் காணாமல் போயிருந்தால், மேலதிக தகவல் ஏதும் கிடைக்காத பட்சத்தில், அவருக்கு மரணச் சான்றிதழ் வழங்க வசதி செய்யும் சிறப்பு வர்த்தமானி அறிவிப்பு டிசம்பர் 2 ஆம் திகதி வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக பதிவாளர் நாயகம் சசிதேவி ஜலதீபன் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசாங்க இழப்பீட்டு செயல் முறையை விரைவுபடுத்த உதவும்.

காணாமல் போனவர்களுக்கு மரணச் சான்றிதழ்களை வழங்குவதற்கான சட்ட ஏற்பாடுகள் தற்போது நடைமுறையில் உள்ளன.

ஒரு குடியிருப்பாளர் அனர்த்தம் காரணமாகக் காணாமல் போனதை கிராம உத்தியோகத்தர் உறுதிப்படுத்தியவுடன், மாவட்ட பிரதிப் பதிவாளர் சான்றிதழை வழங்க அதிகாரம் பெறுவார்.

ஆட்சேபனைகள் எதுவும் பெறப்படாவிட்டால், பிரதேச செயலாளர் விண்ணப்பத்திற்கு ஒப்புதல் அளிக்கலாம்.

அதன் பின்னர், பிராந்திய பிரதி அல்லது உதவிப் பதிவாளர் நாயகத்தினால் அந்த விண்ணப்பம் செயலாக்கப்படும்.

அனர்த்தத்தில் உயிரிழந்ததாக உறுதிப்படுத்தப்பட்ட 611 நபர்களில் 126 பேருக்கு ஏற்கனவே மரணச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் பதிவாளர் நாயகம் தெரிவித்தார். (ஙி)

# கொழும்பு அதிவேக வீதியில் குப்பை போட்ட யாழ்.இளைஞன்

(கொழும்பு)

கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக வீதியில் குப்பையை வீசிச் சென்ற யாழ்ப்பாணத்தை சேர்ந்த சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்

நேற்று முன்தினம் பிற்பகல் அதிவேக வீதி பொலிஸ் பிரிவின் சீதுவ துணைப் பரிபாலன நிலைய அதிகாரிகள் இந்த இளைஞனை கைது செய்துள்ளனர்.

கைதானவர் யாழ்ப்பாணம், அல்வாய் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த அதிவேக வீதியின் 19வது கிலோமீற்றர் மைல்கல் அருகே, கொழும்பில் இருந்து கட்டுநாயக்க நோக்கிச் சென்ற பயணிகளை ஏற்றிச் சென்ற வேன் ஒன்றின் சாரதி, குப்பை அடங்கிய ஒரு பையை அதிவேக வீதியில் எறிவது அங்கு நடமாடும் சோதனையில் ஈடுபட்டிருந்த அதிகாரிகளால் அவதானிக்கப்பட்டுள்ளது.


அதன்படி, குறித்த அதிகாரிகள் உடனடியாக சீதுவ துணைப் பரிபாலன நிலையத்திற்கு தகவல் அளித்துள்ளனர்.

அங்கு கடமையில் இருந்த அதிகாரிகள், அதிவேக வீதிச் சட்டத்தின் கீழ் வீதியில் குப்பைகளை வீசிய குற்றச்சாட்டின் பேரில் குறித்த சாரதியைக் கைது செய்து, மேலதிக நடவடிக்கைக்காக சீதுவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேகநபர் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (ஙி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ச்சியாக இரண்டாவது முறையாகவும் விருதினை வென்றெடுத்தார் மெஸ்சி




2025 ஆம் ஆண்டிற்கான மேஜர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் வன்கொவர் அணியை வீழ்த்தி இண்டர் மயாமி அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றி அசத்தியது.

இண்டர் மயாமி மற்றும் வன்கொவர் அணிகளுக்கிடையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இண்டர் மயாமி அணிக்கு 8 ஆவது நிமிடத் தில் அதிஷ்டம் கைகொடுத்தது.

வன்கொவர் அணியின் எடியர் ஒகம்போவின் காலில் பட்டு இண்டர் மயாமி அணிக்கு ஒன் கோலினை பெற்றுக் கொடுத்தார். இதனால் 1 -0 என இண்டர் மயாமி அணி முன்னிலை பெற்றது.

பிறகு இரு அணிகளும் மாறி மாறி பல முயற்சிகளை மேற்கொண்டும் அது கைகூடாத நிலையில் முதல் பாதி 1-0 என நிறைவுக்கு வந்தது.

பின்னர் இரண்டாவது பாதி ஆட்டம் தொடங்கிய நிலையில் 60 ஆவது நிமிடத்தில் வன்கோவர் அணியின் அலி அஹ்மட் தனது அணியின் முதல் கோலினை பதிவு செய்து 1-1 என போட்டியை சமப்படுத்தி அசத்தினார்.

இதனால் போட்டி விறு விறுப்பின் உச்சத்திற்கு சென்றது.

இந்நிலையில் 71 ஆவது நிமிடத்தில் ரோட் ரிகோ டி போல் இன்டர் மயாமி அணியின் இரண்டாவது கோலினைப் பதிவு செய்து 2-1 என தனது அணியை முன்னிலைப்படுத்தி அசத் தினார்.

பின்னர் போட்டியின் கடைசி தருணத்தில் வன் கோவர் அணியை தோல்வியடையச் செய்யும் மற்றுமொரு கோலினை டிடியோ அல்லன்டே அடித்து 3-1 என இண்டர் மயாமி அணியை வெற்றிப்பெற வைத்து அசத்தினார்.

இதனால் இப்பருவகாலத்திற்கான மேஜர் லீக் கால்பந்தாட்ட சம்பியனாக லியோனல் மெஸ்சி தலைமையிலான இண்டர் மயாமி அணி வெற்றி பெற்று சாதனை படைத்தது.

அதே நேரம் தனது கால் பந்து வாழ்க்கையில் 48 ஆவது கிண்ணத்தைக் கைப்பற்றி சாதனை படைத்துள்ளார் லியோனல் மெஸ்சி. இன்டர் மயாமி அணியில் மெஸ்சி இணைந்து ஒரு வருடம் பூர்த்தியாகியுள்ளதுடன் இம்முறையும் அணியின் அதி சிறந்த வீரருக்கான விருதினை மெஸ்சி தட்டிச்சென்றார்.

தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக இந்த விருதினை மெஸ்சி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)


## பகிரங்க ஏல அறிவித்தல்
## கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சந்தைகள், இறைச்சிக்கடைகள் உள்ளிட்ட குத்தகை நிலையங்களை 2026.01.01- 2026.12.31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான பகிரங்க ஏலம் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக நடைபெறும்.

பகிரங்க ஏலம் நடைபெறும் திகதி, நேரம் :- 2025.12.26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணி
பகிரங்க ஏலம் நடைபெறும் இடம் :- கரைச்சி பிரதேச சபை, தலைமை அலுவலகம், கிளிநொச்சி.

**பகிரங்க ஏலம் விடப்படும் குத்தகை நிலையங்கள்**

**கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி**
**கேள்வித்தொகை விபரம்**

| இல | குத்தகை நிலையம் | பகிரங்க ஏல இழிவுத்தொகை |
|---|---|---|
| 1 | பரந்தன் சந்தியிலிருந்து இரணைமடு சந்தி வரையான A9 வீதி வாகனத்தரிப்பிடம் | 81,990.00 |
| 2 | வட்டக்கச்சி சந்தை தொகுதி | 189,450.00 |
| 3 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை மரக்கறி | 6,633,900.00 |
| 4 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை பழம்,பாக்கு,வெற்றிலை | 3,192,300.00 |
| 5 | கிளி சந்தை இல 02 கோழியிறைச்சிக்கடை | 3,642,750.00 |
| 6 | புன்னைநீராவி மாட்டிறைச்சிக்கடை | 144,000.00 |
| 7 | D8உருத்திரபுரம் மாட்டிறைச்சிக்கடை | 180,000.00 |
| 8 | கிளி சேவைசந்தை பொது மலசல கூடம் | 36,450.00 |
| 9 | பசுமைப்பூங்கா அழகுக்கலை நிலையம் | 11,216.06 |
| 10 | பரந்தன் சந்தை பொது மலசலகூடம் | 19,440.00 |
| 11 | ஸ்கந்தபுரம் கோழி இறைச்சிக்கடை | 369,900.00 |
| 12 | கல்லாறு சந்தை தொகுதி | 10,530.00 |
| 13 | முரசுமோட்டை கோழி இறைச்சிக்கடை | 19,073.35 |
| | மூன்று வருட கால குத்தகை (01.01.2026 -31.12.2028) | |
| 14 | வன்னேரிக்குளம் சுற்றுலா மையம் | 79,440.00 |

**நிபந்தனைகள்**

1. பகிரங்க ஏலத்தில் பங்குபற்றுபவர்கள் 2025.12.26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு முன்னர் ரூபா.500.00 செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும். பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டவர்கள் மாத்திரமே பகிரங்க ஏலத்தில் பங்குபற்ற முடியும்.
2. சித்தியடையும் ஏலகாரர் கேள்வி தொகையின் மூன்றில் ஒரு பகுதி தொகையினை அன்றைய தினமே உடனடியாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.
3. 2025.10.27 ஆம் திகதி வலம்புரி பத்திரிகையில் வெளியிடப்பட்ட கேள்வி அறிவித்தல், கரைச்சி பிரதேச சபை தலைமை அலுவலக விளம்பரப் பலகையிலுள்ள நிபந்தனைகளும் கருத்திற்கொள்ளப்படும்.

தவிசாளர்,
கரைச்சி பிரதேச சபை,
கிளிநொச்சி.

(C-4547) 12.12.2025


## பயன்பாட்டில் ...

யாழ்.மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபனுக்கும் வடபிராந்திய கடற்படைத் தளபதி றியல் அட்மிரல் லியன ஹமகேக்கும் இடையே நேற்று முன்தினம் காங்கேசன்துறை கடற்படை அலுவலகத்தில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில்,

கடற்படையின் பயன்பாட்டிலுள்ள காணிகள் சீரான நடைமுறைகளில் விடுவிக்கப்படும் எனவும் தேவையான காணிகள் முறையாகப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என லியன ஹமகேவிடம் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இந்திய மீனவர்களின் அத்து மீறிய மீன்பிடி தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுவருவதாகவும் கடற்படை தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாகவும் அத்து மீறலைக் கட்டுப்படுத்த பொறிமுறை உருவாக்கப்படும் எனவும் வடபிராந்திய கடற்படைத் தளபதி தெரிவித்ததுடன் கடல் வழியாகக் கடத்தப்படும் போதைப்பொருள் கடத்தல் கட்டுப்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் கே.சிவகரன் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், வடமாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் குரூஸ், பிரதேச செயலாளர்கள், கடற்படை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-7)

## இலங்கையை ...

இராஜாங்க செயலாளர் அலிசன் ஹூக்கர் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கும் அமெரிக்க அரசியல் விவகாரங்கள் தொடர்பான உப இராஜாங்க செயலாளர் அலிசன் ஹூக்கர் இற்கும் இடையிலான சந்திப்பு நேற்று (11) காலை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இதன் போது உப இராஜாங்கச் செயலாளர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இலங்கை எதிர்கொள்ளும் அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்க உதவி வழங்க முடிந்ததில் மகிழ்ச்சி அடைவதாகத் தெரிவித்த அலிசன் ஹூக்கர், அனர்த்தத்தினால் இறந்த அனைவரின் குடும்பங்களுக்கும் தனது இரங்கலைத் தெரிவித்தார்.

இந்த நெருக்கடியான நேரத்தில் பல்வேறு நிவாரண மற்றும் நிவாரணக் குழுக்களை நாட்டிற்கு அனுப்புவதில் அமெரிக்க ஜனாதிபதியும் அரசாங்கமும் அளித்த ஆதரவிற்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நன்றி தெரிவித்தார்.

அமெரிக்கா உட்பட உலகெங்கிலும் உள்ள அனைத்து நட்பு நாடுகளும் இலங்கைக்கு அளித்த மனப்பூர்வமான ஆதரவை ஜனாதிபதி பாராட்டினார்.

நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி பொருளாதாரக் குறிகாட்டிகளை உயர்த்தி வரும் நிலையிலே இலங்கை இந்த அனர்த்தத்திற்கு முகங்கொடுக்க நேரிட்டதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் நீண்டகால அடிப்படையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் எதிர் காலத்தில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் சேதமடைந்த நெடுஞ்சாலைகள், புகையிரதப் பாதைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளையும் விவசாயம், கால்நடைகள், சிறிய மற்றும் மத்திய தர கைத்தொழில்கள் உள்ளிட்ட முக்கிய வருமான வழிகளையும் மீட்டெடுக்க சிறிது காலம் எடுக்கும் என்றும் இது தொடர்பாக அனைத்து நட்பு நாடுகளின் உதவிகளையும் எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையுடனான வாழ்க்கைக்கு அரசாங்கம் உறுதுணையாக இருக்கும்

## அமைச்சர் சந்திரசேகர்

**(கொழும்பு)**

**"ஒரு குடும்பமும் தனியாக இந்தத் துயரத்தைக் கடக்க வேண்டியதில்லை. அவர்கள் மீண்டும் நம்பிக்கையுடன் வாழ்வைத் தொடங்கும் வரை அரசாங்கத்தின் ஆதரவு தொடர்ந்து வழங்கப்படும்," என அமைச்சர் சந்திரசேகர் உறுதியளித்தார்.**

நுவரெலியாவில் ஏற்பட்ட இந்த இயற்கை அனர்த்தம் மக்களின் வாழ்க்கையைப் பெரிதும் பாதித்துள்ள நிலையிலும், அவர்கள் மீண்டும் நிம்மதியான வாழ்க்கைக்குத் திரும்புவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் அரசின் பொறுப்புடன் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இதன் போது தற்காலிக தங்குமிடங்களில் தங்கவைக்கப்பட்டிருந்த குடும்பங்களையும் குழந்தைகளையும் நேரில் சந்தித்து, அவர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களையும்



கவலைகளையும் கேட்டறிந்தார். (நி)

# பண்டிகைக் காலத்தில் முட்டை விலை உயர வாய்ப்பில்லை

## உற்பத்தியாளர்கள் சங்கம்

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தில் முட்டையின் விலை அதிகரிக்கும் என சிலர் கூறுவது உண்மைக்கு புறம்பானது என்று அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.


வெளிநாட்டிலிருந்து முட்டைகளை இறக்குமதி செய்யும் நோக்கில் சிலர் இந்த பொய்யான கருத்துக்களை முன்வைத்துள்ளதாக, அந்த சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், 45 ரூபாய்க்கும் குறைவான விலையில் முட்டைகளை வழங்க முடியும் என்றும் அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)



ஆறுமுகநாவலர் குருபூசை கடந்த 10 ஆம் திகதி புதன்கிழமை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

# மருதங்கேணி வைத்தியசாலைக்கு ரஜீவன் எம்.பி களவிஜயம்



(கரணவாய்)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதிகளும் பாதிப்புகளுக்கு உள்ளாகின.

இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினரும் வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி குழுத் தலைவருமான ரஜீபன் வடமராட்சி கிழக்கு பகுதிக்கு களவிஜயம் ஒன்றைமேற்கொண்டார்

இவ்விஜயத்தின் போது வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச வைத்தியசாலைக்கு சென்று வைத்தியசாலையில் அண்மைக்காலமாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிந்து கொண்டதுடன் வைத்திய சாலை வளாகம் முழுவதும் நீர் தேங்கி நிற்கும் இடங்களையும் பார்வையிட்டு அதற்கான தீர்வுகளைப் பெற்றுத் தருவதற்கு விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் வாக்குறுதி அளித்தார். (8-60)

# அரச சேவையில் 2,284 வேலை வாய்ப்புகள் ஆட்சேர்ப்பிற்கு அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

அரச சேவையில் தற்போது நிலவும் 2284 பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரச சேவையின் ஆட்சேர்ப்பு செயன்முறையை மீளாய்வு செய்து தேவைகள், முன்னுரிமைகள் மற்றும் கால வரையறையை இனங்கண்டு அது சார்ந்த அத்தியாவசியமாக மேற்கொள்ள வேண்டிய ஆட்சேர்ப்பு தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பிரதமரின் செயலாளர் தலைமையில் அதிகாரிகள் குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு அமைச்சும் தமது அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் நியமனம் மற்றும் ஏனைய நிறுவனங்களில் நிலவும் பதவி வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்காக மேற்குறித்த குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு 2025.11.14 ஆம் திகதி நடைபெற்ற மேற்குறித்த அதிகாரிகள் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள விதந்துரைகளுக்கமைய பின்வரும் ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்காக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி)

# தீவகங்களுக்கு பாதுகாப்பான மீன்பிடித் துறைமுகங்கள்

## இளங்குமரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

குறிகாட்டுவான் மற்றும் நயினாதீவு பகுதிகளில் உள்ள கடற்றொழிலாளர்களின் படகுகள் சேதமின்றி பாதுகாப்பாக நிறுத்தி வைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் விரைவில் செய்து தரப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் அப்பகுதி கடற்தொழிலாளர்களுக்கு உறுதி அளித்துள்ளார்.

குறிகாட்டுவான் மற்றும் நயினாதீவு கடற்றொழிலாளர்களை சந்தித்து கலந்துரையாடிய போதே, அவ்வாறு தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் அப்பகுதி கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் நடைமுறை சவால்கள், தேவையான அடிப்படை வசதிகள், பாதுகாப்பான துறைமுக நிலைமை ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டதோடு, தகுந்த தீர்வுகளை விரைவாக பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்தார். (8-33)



புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம், சிவில் பாதுகாப்பு படையினர், புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, பிரதேச சபையினர் இணைந்து புதுக்குடியிருப்பு நகர் பகுதி[illegible] நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். (படம்:சதீஸ்)


# கண்ணீர் அஞ்சலி

அமரர்.திருமதி

நிஷாந்தினி நித்திலவர்ணண்

(ஆசிரியர், ஹாட்லிக் கல்லூரி)



தனது பிரியமான மனைவியை
இழந்து தவிக்கும்
எங்கள் துறைத் தலைவர்
கலாநிதி **ஆ.நித்திலவர்ணண்** அவர்களினதும்
அருமைத் தாயைப் பிரிந்து பரிதவிக்கும்
அவர் அன்புக் குழந்தைகளினதும்
துயரில் நாமும் பங்கெடுக்கின்றோம்.

விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள், மாணவர்கள்
கல்வியியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(c-4545)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதங்கேணி- பருத்தித்துறை வீதியை புனரமைத்துத் தாருங்கள்

## பொது மக்கள் கோரிக்கை

**(கரணவாய்)......................... மருதங்கேணி - பருத்தித்துறை வீதியைப் புனரமைத்து தருமாறு அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**



தற்போது பெய்துவரும் தொடர் மழை காரணமாக மருதங்கேணி - பருத்தித்துறை வீதி முற்றாக பாதிப்படைந்துள்ளது.

கடந்த காலத்தில் பெருமளவு நிதியில் போடப்பட்ட குறித்த வீதி இன்றுவரை தரமற்ற வீதியாகவே காணப்படுகின்றது.

குறித்த வீதியை புனரமைப்பு செய்து தருமாறு பலமுறை கோரிக்கை விடுத்தும் பலனளிக்கவில்லை.

மருத்துவ நோயாளிகள், அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள், வர்த்தகர்கள் என பலரும் பயணம் செய்யும் குறித்த வீதி நீண்ட காலமாக பாழடைந்த வீதியாகவே காணப்படுகின்றது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறித்த வீதியை புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(8-60)

# மகாகவி பாரதியாரின் 143 ஆவது பிறந்த நாள் நிகழ்வு



(அராலி)

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 143ஆவது பிறந்த நாள் நிகழ்வானது நேற்றைய தினம் வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள பாரதியார் சிலையடியில் நடைபெற்றது.

இதன்போது மகாகவி பாரதியாரின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தப்பட்டது.

கலாநிதி சிதம்பரமோகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மறவன்புலவு சச்சிதானந்தம், சமூக செயற்பாட்டாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (8-104)

# சைவ பரிபாலன சபை பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையால் வருடா வருடம் நடாத்தப்பட்டு வரும் சைவசமய, தமிழ் பாட பரீட்சை இவ் வருடம் 20.12.2025 ஆம் திகதியன்று நடைபெற இருந்தது.

நாட்டில் ஏற்பட்ட பேரிடர் காரணமாக குறித்த பரீட்சை உரிய திகதியில் நடைபெற மாட்டாது.

புதிய திகதி பின்னர் அறியத்தரப்படும் என செயலாளர் அறிவித்துள்ளார். (8)

# 'விடுதலையின் விதைகள்' தெருவெளி நாடகம்



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் Clean Sri Lanka திட்டத்தின் நடமாடும் சேவை இடம்பெற்றது.

இந் நிகழ்வில் ஜெயம் நாடகக் கல்லூரியின் தயாரிப்பில் "விடுதலையின் விதைகள்" எனும் தெருவெளி நாடகம் சிறப்பாக அரங்கேற்றப்பட்டது.

ஜெயம் ஜெகனின் பாடல் வரிகள், எழுத்துரு மற்றும் நெறியாள்கையில் உருவான இந்த நாடகம், ஜெயம் நாடகக் கல்லூரி கலைஞர்களினால் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று உள்ளிட்ட பல பிரதேச செயலகங்களில் தொடர்ந்து அரங்கேற்றப்பட்டு மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-299)

# திருவாதவூரடிகள் புராணம் முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

மாணிக்கவாசகரின் திவ்யமான வரலாற்றைக் கூறும் திருவாதவூரடிகள் புராணமானது கடந்த காலங்களில் முன்னோர்கள் மழை, வெள்ளப் பெருக்குகளில் இருந்து தம்மை பாதுகாக்க மாரி காலங்களில் முற்றோதல் செய்து வந்தார்கள். அந்த வகையில் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக மக்களையும் ஏனைய உயிரினங்களையும் விவசாயப் பயிர்களையும் பாதுகாப்பதற்கு திருவாதவூரடிகள் புராணம் புராண படனம் செய்வதற்கு சைவ சமயப் பாதுகாப்பு பேரவையினர் முன்வந்துள்ளனர்.

கடந்த 5 ஆம் திகதி ஆரம்பமான இந்த புராணபடனமானது எதிர்வரும் ஜனவரி மாதம் 9 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

எனவே புராணபடனம் செய்ய விரும்பும் ஆலயங்கள், புராணம் படிப்பவர்கள் 077 226 2572, 077 613 2176 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு முற்பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 800 | 800 | 600 | 500 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 180 | 250 |
| பச்சைமிளகாய் | 400 | 1100 | 500 | 500 |
| தக்காளி | 300 | 300 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 150-200 | 200 | 150 |
| கோவா | 250 | 250 | 350 | 400 |
| கரட் | 400 | 230 | 350 | 400 |
| பூசணி | 120 | 140 | 150 | 160 |
| புடோல் | 300 | 400 | 350 | 400 |
| வாழைக்காய் | 100 | 70 | 80 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 250-300 | 250 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | 280 | 300 |
| பாகற்காய் | 1200 | 1300 | 1500 | 2000 |
| வெண்டக்காய் | 300 | 300 | 300 | 500 |
| கருணைக்கிழங்கு | 300 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 1200 | 700-1000 | 1000 | 1200 |
| லீக்ஸ் | 400 | 230 | 300 | 400 |
| பீற்றூட் | 350 | 400 | 450 | 450 |
| கறிமிளகாய் | 900 | 850 | 800 | 1000 |
| முருங்கைக்காய் | 1800 | -- | 2000 | 1500 |
| போஞ்சி | 800 | 800 | 1000 | 1200 |
| கத்தரிதம்புள்ள | 600 | 500 | 600 | 450 |
| கீரை - 1 பிடி | 150 | 80-150 | 200 | 200 |
| தேசிக்காய் | 1000 | 600 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 100 | 120-180 |
| இராசவள்ளி | 600 | 800 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 450 | 800 | 1000 | -- |
| முள்ளங்கி | 400 | 250 | 200 | 400 |
| பொன்னாங்காணி | 100 | 90 | 150 | 80 |
| வல்லாரை | 80 | 70 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 100-150 | 100 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 18 கொழும்புத்துறை வீதியில் அமைந்துள்ள ஆதன இலக்கம் 581/41 ஆதனத்தின் ஆதனப் பெயரானது எமது ஆதனப்பதிவேட்டில் சொந்தக்காரர் என பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், கொழும்புத்துறையைச் சேர்ந்த யோசியாம்பிள்ளை டொமினிக் அல்லது யோசியாம்பிள்ளை அருள்நாயகம் டொமினிக் என்பவர் பிரசித்த நொத்தாரிசு அ.மரியாம்பிள்ளை என்பவர் முகதாவில் 1979.03.19 ஆம் திகதி 412 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிப்படி சுண்டிக்குளி கோவிற்பற்று கொழும்புத் துறை இறை "அமரக்கோன் முதலியார் காட்டுத்தலைமடையும் மறுபிரிவுகளும் நெற்பரப்பு 540 விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தை குருநகர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சவரிமுத்து கிறிஸ்தோபருக்கும் பெண் கெலனுக்கும் அறுதி விற்றுள்ளார்.

குறித்த ஆதனம் குருநகர் மத்தியகிழக்கு வீதியைச் சேர்ந்த திருமதி றிச்சேட் கான்ஸ்போவர் எலிசபேத் குயின் என்பவர் நொத்தாரிசு அ.இராஜரட்ணம் என்பவர் முகதாவில் 2004.01.15 ஆம் திகதி 2015 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதியில் நில.பர 375 விஸ்தீரணம் கொண்ட ஆதனமானது சவிரிமுத்து கிறிஸ்தோபர் காலமாகிவிட எனது பெற்றோருக்கு ஏகவாரிசான எனக்கடைந்த உரித்தும் எனதாட்சியுமானது என வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த ஆதனம் றிச்சேட் கான்ஸ்போவர் அற்றோணி திருமதி எலிசபேத் குயின் றிச்சேட் கான்ஸ்போவர் என்பவர் நொத்தாரிசு ஜெயசித்திரா சிறிதரன் என்பவர் முகதாவில் 2014.10.27 ஆம் திகதி 2213 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் நில.பர 222 குளி 3.92 விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தை சாந்தகுமார் கிறோசன் பெண் விதுஸ்ரா றெனுசியாவிற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் சாந்தகுமார் நிறோசன் பெண் விதுஸ்ரா றெனுசியா என்பவர் நொத்தாரிசு தே.சுபாஜினி என்பவர் முகதாவில் 04.03.2015 ஆம் திகதி 118 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிப்படி நில.பர 1குளி 5.49 விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தை சந்திரலிங்கம் ஜெர்சன்ரைன் அறுதியாக விற்றுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாண பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கொழும்புத்துறை இறை."அமரக்கோன் முதலியார் காட்டுத்தலைமடையும் மறுபிரிவுகளும்" என்று வழங்கும் "கொழும்புத்துறைத் தெருத்தோட்டம்" நிலப்பரப்பு 375 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.கனகசபையால் 12.03.2012 இல் 1 தொடக்கம் 10 துண்டுகளாக பிரிவிட்டு வரைந்த 4976/12 ஆம் இலக்கத்தில் அளந்த நில அளவைப்படத்தின் படி நிலப்பரப்பு. நிலப்பரப்பு 376 குளி 12.8 இதில் ஏற்கனவே அறுதியாக விற்கப்பட்டது போக மிகுதி நிலப்பரப்பு 222 குளி 3.92 இதில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.கனகசபையால் 05.12.2014 இல் 6088A/14 ஆம் இலக்கத்தில் அளந்த நில அளவைப்படத்தின் படி துண்டு 67 (lot 67) என சுட்டப்பட்ட நிலப்பரப்பு ஒன்று குளி சைபர் ஐந்து தசம் நான்கு ஒன்பது (நில.பர 01 குளி 05.49) இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.கனகசபையால் 21.12.2014 இல் 6088A 67/14 ஆம் இலக்கத்தில் அளந்த நில அளவைப்படத்தில் துண்டு 1 (Lot1) என சுட்டப்பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பு ஒன்று குளி சைபர் ஐந்து தசம் நான்கு ஒன்பதுக்கும் குறித்த 6088A/14 ஆம் இலக்க நிலஅளவைப்படத்தில் காட்டப்பட்டபடி எல்லை:

கிழக்கு- குறித்த 6088A/14 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 66 என காட்டப்பட்ட ஆதனம் வடக்கு- குறித்த ஆதனம் 6088A/14 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 56 என காட்டப்பட்ட ஆதனம்
மேற்கு- இந்த நிலஅளவையாளரின் 5796/14 நில அளவைப்படத்தில் துண்டு 1 (Lot 1) என காட்டப்பட்ட ஆதனம்
தெற்கு- ஆறு மீற்றர் அகலப்பாதை.

இதடங்கலும் இன்னும் இவ்வாதனத்திற்கு தெற்கே உள்ள ஆறு மீற்றர் அகலமுள்ள பாதையால் பிரதான வீதிக்குப் போக்குவரத்து செய்யுமுரித்தும்

தற்போது இவ்வாதனத்தை சந்திரலிங்கம் ஜெர்சன்ரைன் என்பவர் தனது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சந்திரலிங்கம் ஜெர்சன்ரைன் என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**முதல்வர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

(C-4546)

# யாழ்/மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி சங்கம். (தலைமையகம்) யாழ்ப்பாணம்



**ஓட்டோ சாரதிகளுக்கான அறிவித்தல்**

**வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்**

எமது சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் தலைவர் திரு.ம.இளங்கோவன் அவர்கள் தலைமையில் 14.12.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு யாழ். நீராவியடியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் மண்டபத்தில் நடைபெறும். எனவே தாங்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**நிகழ்ச்சிகள்**

1.விருந்தினர் கௌரவிப்பு
2.இறைவணக்கம்
3.வரவேற்புரை(செயலாளர்)
4.தலைமையுரை (தலைவர்)
5.விஷேட பிரதிநிதிகள் உரை
6.எதிர்கால செயற்பாடு தொடர்பில் தீர்மானித்தல்
7.செயலாளர் ஆண்டறிக்கை சமர்ப்பித்தல்
8.பொருளாளர் வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தல்- (2025 ஆம் ஆண்டு)
9.அங்கத்தவர் கருத்துரை
10. நிர்வாகக் குலைவு
11.புதிய நிர்வாகத் தெரிவு

(குறிப்பு :- பொதுக்கூட்டத்துக்கு சமுகம் தரும். ஓட்டோ சாரதிகள் சரியாக 10.00 மணிக்குள் சமுகம் தரவேண்டும். 10.15 பின் வரவு பதிவு மேற்கொள்ளப்படமாட்டாது.)

நிர்வாகம்,
40, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்,

(627) 12.12.2025

# மண்சரிவு அபாயம்

## மேலும் 238 குடும்பங்கள் இடம்பெயர்வு




(பதுளை)

பதுளை மாவட்டத்தின் சில பகுதிகளில் மண்சரிவு அபாயம் ஏற்படு வதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதால் மேலும் 238 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளதாக பதுளை மாவட்ட செயலாளர் ஸ்ரீ பிரஹாத் அபேவர்தன இன்று வியாழக் கிழமை தெரிவித்துள்ளார்.

238 குடும்பங்களைச் சேர்ந்த 806 பேரே இவ்வாறு இடம்பெயர்ந்துள்ளனர்.

பதுளை மாவட்டத் தின் சில பகுதிகளில் மண் மேடுகள் சற்று முன்னோக்கி சரிந்து காணப்படுவதாக பதுளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்திருந்தது.

இதனால், மண்சரிவு அபாயமிக்க பகுதிகளில் வாழும் மேலும் 238 குடும்பங்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு அவர்கள் இடம்பெயர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி)

# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை: பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்**

**விண்ணப்பதாரரின் பெயர் : பார்த்தீபன் பெண் நிவேதா**

**ஆதனப்பதிவேட்டின் படி பெயர் : சொந்தக்காரர்**

**ஆதன இல - 74,74A வீதி - சென் ஹென்றீஸ் வீதி வட்டாரம் -02**

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 02 சென் ஹென்றிஸ் வீதியில் இவ் ஆதனம் அமைந்துள்ளது. பண்டத்தரிப்பு கோயில்பற்று சிறுவிளான் இறை கப்பனை நிலப்பரப்பு இலா மூன்று (3) ம் அதற்குரியவைகளும் கிணறும் வான்பயிர் செய்பயிர்களும் என்ற ஆதனம் அருமை நாயகியின் பெரியதாய் வீரன் பெண்தங்கமுத்துவிற்கு சீதனமாகக் கொடுத்திருந்தார்கள். வீரன் பெண் தங்கமுத்துவிற்கு பிள்ளைகள் இல்லாமையினால் அருச்சுணன் பெண் அருமைநாயகி என்பவர்களுடன் இவ் ஆதனத்தில் இருந்து காலஞ் சென்றுவிட்டார். அருச்சுணன் பெண் அருமைநாயகி என்பவர் பிரசித்த நொத்தரிஸ் மு. கதிர்காமநாதன் முகதாவில் 11739/05.07.2010 இலக்க அத்தாட்சிப்படுத்திய பிரகடன உறுதி மூலம் தமக்கே சொந்தமென வெளிப்படுத்தி உள்ளார். அருச்சுனன் பெண் அருமைநாயகி என்பவர்கள் தமது மகளாகிய இந்திரன் பெண் சிவாஜினிக்கு இவ் ஆதனத்தை 11851/31.07.2010 இலக்க உறுதி மூலம் சீதனமாக வழங்கியுள்ளார்கள். இந்திரன் பெண் சிவாஜினி என்பவர் 411/27.08.2023 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் தமது மகளாகிய பார்த்திபன் பெண் நிவேதாவிற்கு வழங்கியுள்ளார்.

மேலும் குறித்த ஆதனத்தில் தனது ஆட்சியிலுள்ள பாகமான ஆதனம் தொடர்பில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.தவேந்திர அவர்களால் அளந்து வரைந்த 1005 ஆம் இலக்க 12.04.2025 ஆம் திகதிய நில அளவைப்படத்தில் நிலப்பரப்பு 2 குளி 04.75 ஆக காட்டப்படுகின்றது.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலி தென்மேற்குப் பிரதேச சபை பண்டத்தரிப்பு கோவிற்பற்று சிறுவிளான் இறை கப்பனை நிலப்பரப்பு மூன்று (3) ஆகும்.
இதன் எல்லைகள்

கிழக்கு - கார்த்திகேசு நிமலேந்திரன்

வடக்கு - பொன்னையா தர்மலிங்கம்

மேற்கு - அம்மன் வீதி

தெற்கு - சென் ஹென்றீஸ் வீதி

மேற்குறித்த ஆதனத்தை பார்த்தீபன் பெண் நிவேதா என்பவருக்கு 411/27.08.2023 இலக்க நன்கொடை உறுதி மூலம் வழங்கியுள்ளார். பார்த்தீபன் பெண் நிவேதா என்பவர் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு கிராம உபஅலுவலகத்தின் ஆதனப்பதிவேடுகளில் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். மேற்படி ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் பார்த்தீபன் பெண் நிவேதா என்பவரின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன உரிமை மாற்றம் செய்வதால் ஏற்படக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**க.யெசீதன், தவிசாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**

(610)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## தீ விபத்திற்குள்ளான குடியிருப்புக் கட்டடம்

□ 12 பேர் உயிரிழப்பு

□ சீனாவில் துயரம்



(பீஜிங்)

சீனாவில் குடியிருப்பு கட்டடமொன்று தீ விபத்திற்குள்ளாகியுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த விபத்தில் சிக்கி 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

குவாங்டாங் மாகாணத்தில் சாவோனன் மாவட்டத்தில் உள்ள குடியிருப்புக் கட்டடம் ஒன்றே இவ்வாறு விபத்திற்குள்ளாகியுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில், தகவலறிந்து அங்கு விரைந்த தீயணைப்புப் படையினர் ஏராளமான தீயணைப்பு வாகனங்களின் உதவியுடன் சுமார் 40 நிமிடங்கள் போராடி தீயை அணைத்துள்ளனர்.

இந்த நிலையில், தீ விபத்தில் சிக்கி அந்தக் கட்டடத்தில் வசித்து வந்த சுமார் 12 பேர் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த, விபத்திற்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, ஹாங்காங்கில் கடந்த நவம்பர் 26ஆம் திகதி அடுக்குமாடி குடியிருப்புக் கட்டடத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 150இற்கும் அதிகமானோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)



# மொராக்கோவில் இ...

# அடுக்குமாடி குடி...

○ 19 பேர் உயிரிழப்பு ○

(ரபாத்) ------------------

**மொராக்கோ நாட்டில் தலா நான்கு மாடிகளைக் கொண்டு இரண்டு அடுக்கு மாடி குடியிருப்புகள் இடிந்து விழுந்ததில் 19 பேர் பலியாகினர்; 16 பேர் படுகாயமடைந்தனர்.**

வட ஆபிரிக்க நாடான மொராக்கோவின் மிகப் பழமையான நகரங்களில் ஒன்றாகவும் சுற்றுலாத் தலமாகவும் பெஸ் உள்ளது. மக்கள் தொகை அதிகம் கொண்ட இந்த நகரத்தில் விரிசல்களை கொண்ட ஏராளமான பழைய கட்டடங்கள் உள்ளன.

இந்த நிலையில் பெஸ் நகரின் அல்-மசிரா என்ற பகுதியில், அடுத்தடுத்து இருந்த, தலா நான்கு மாடிகள் உள்ள இரண்டு குடியிருப்பு கட்டடங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு, திடீரென இடிந்து விழுந்தன. இந்த விபத்தில் இதுவரை 19 பேர் உயிரிழந்துள்ளனர் 16 பேர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதையடுத்து உள்ளூர் அதிகாரிகள், பொலிஸ் துறை, சிவில் பாதுகாப்பு குழுக்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து மீட்புப் பணிகளை தொடங்கின.


அருகில் உள்ள கட்டடங்களில் இருந்த குடும்பங்கள் பாதுகாப்பிற்காக வெளியேற்றப்பட்டன.

பழமையான இந்தக் கட்டடங்களில், சில மாதங்களாக விரிசல் ஏற்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. இதன் காரணமாகவே இடிந்து விழுந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது இந்த ஆண்டின்



## ஓராண்டில் 85,000 விசாக்கள் இரத்து; அமெரிக்கா அரசு கடும் கெடுபிடி



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் கடந்த ஜனவரி முதல் தற்போது வரை 85,000 பேரின் விசாக்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு வெளியுறவுத் துறை அறிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றதில் இருந்து கடுமையான குடியேற்றக் கொள்கைகளை வகுத்து வருகிறார்.

வேலை பார்ப்பதற்காக வெளிநாட்டவருக்கு வழங்கப்படும் எச் 1பி விசா, மாணவர் விசா என அனைத்திற்கும் பல்வேறு கெடுபிடிகளை விதித்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த ஜனவரி மாதம் முதல் தற்போது வரை, 85,000 விசாக்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது கடந்த ஆண்டு இரத்து செய்யப்பட்ட எண்ணிக்கையைவிட இரண்டு மடங்கு அதிகம் என்று மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.


இரத்து செய்யப்பட்ட விசாக்களில் 8,000இற்கும் மேற்பட்டவை மாணவர்களுக்கான விசாக்கள் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# டிந்து விழுந்த யிருப்புகள்!

## 16 பேர் படுகாயம்



மூன்றாவது கட்டட விபத்து சம்பவமாகும். கடந்த மே மாதத்தில் அல்-ஹஸ்ஸானி பகுதியில் ஒரு கட்டடம் இடிந்து 10 பேர் உயிரிழந்தனர்.


கடந்த பெப்ரவரியில் பெஸ் நகரில் ஒரு பழைய வீடு இடிந்து 5 பேர் இறந்தனர்.

பழமையான பெஸ் நகரத்தில் கட்டட விதிமுறைகள் கடுமையாக அமுல்படுத்தப்படாததே விபத்துகளுக்கு காரணம் என மனித உரிமை ஆர்வலர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். (நி)

வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

பாதிக்கும் மேற்பட்டவை, மது அருந்தி வாகனம் ஓட்டுதல், தாக்குதல், திருட்டு போன்ற குற்றச் செயல்களுக்காக இரத்து செய்யப்பட்டுள்ளன.

மேலும் பயங்கரவாத ஆதரவு, விசா காலாவதி, பொதுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் போன்ற காரணங்களுக்காகவும் விசாக்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன. (நி)




# ரூ.12 இலட்சம் சம்பாதித்தால் மதுபானம் அருந்த அனுமதியாம்




(ரியாத்)

முஸ்லிம் அல்லாதோர் மதுபானம் அருந்துவதற்கு சவுதி அரேபியா அரசு அனுமதி அளித்துள்ளது.

மாதம், 12 இலட்சம் ரூபாய்க்கு மேல் சம்பாதிப்போருக்கு மட்டும் இந்த விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மேற்காசிய நாடான சவுதி அரேபியாவில், முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக உள்ளனர். இங்கு மதக்கட்டுப்பாடுகள் மிகவும் கடுமையாக பின்பற்றப்படுகின்றன.

அதன்படி மது அருந்துவதற்கு அந்த நாட்டில் முழுத் தடையுள்ளது.

இந்த நிலையில், 70 ஆண்டுகளுக்குப் பின், வெளிநாட்டவர் வசதிக்காக தலைநகர் ரியாத்தில் ஒரு மதுபானக்கடை கடந்த ஆண்டு திறக்கப்பட்டது.

ஆனால் மதுபானங்களை வாங்க மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டது.

தற்போது மதுபானம் குடிப்பதற்கான கட்டுப்பாடுகளை சவுதி அரேபியா தளர்த்தியுள்ளது.

அதன்படி முஸ்லிம் அல்லாதோர் மதுபானம் வாங்கி குடிக்கலாம்.

ஆனால் மாதம் 12 இலட்சம் ரூபாய்க்கு மேல் சம்பாதிப்பவர்களுக்கு மட்டுமே இந்தச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது. (நி)

# தீபாவளி பண்டிகைக்கு யுனெஸ்கோ கொடுத்த அங்கீகாரம்



இந்துக்களால் கோலாகலமாக கொண்டாடப்படும் மிக முக்கிய பண்டிகைகளில் ஒன்றான தீபாவளி பண்டிகை யுனெஸ்கோவின் அருவமான கலாச்சார பாரம்பரிய பட்டியலில் நேற்று இணைக்கப்பட்டுள்ளது.

டில்லி செங்கோட்டையில் நடைபெற்ற யுனெஸ்கோவின் முக்கிய கூட்டத்தின்போது இந்த முடிவு எடுக்கப்பட்டது.

அருவமான கலாசார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான அரசுகளுக்கிடையேயான குழுவின் மாநாடு தற்போது இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

டிசம்பர் 8ஆம் திகதி முதல் நாளை 13ஆம் திகதி வரை டில்லியில் உள்ள செங்கோட்டையில் இந்த மாநாடு நடத்தப்பட்டு வருகிறது.

இந்த மாநாட்டை இந்தியா நடத்துவது இதுவே முதல் முறையாகும்.

இந்நிலையில் தீபாவளிக்கு முன்னரே இந்தியாவின் பல முக்கிய நிகழ்வுகள் யுனெஸ்கோவின் அருவமான கலாசார பாரம்பரிய பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

அதன்படி, கும்பமேளா, கொல்கத்தாவின் துர்க்கா பூஜை, குஜராத்தின் கர்பா நடனம், யோகா, வேத மந்திரங்களின் பாரம்பரியம் மற்றும் "இராமாயண" காவியத்தின் பாரம்பரிய நிகழ்ச்சியான ராம்லீலா உள்ளிட்ட 15 மரபுகள் தற்போது இந்தியாவில் யுனெஸ்கோவின் அருவமான கலாசார பாரம்பரியத்தின் பிரதிநிதித்துவ பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி சாரதி அனுமதிப்பத்திரங்கள் தயாரித்த இருவர் கைது!

(பொரலஸ்கமுவ)

பொரலஸ்கமுவ - வெரஹெர பகுதியில் போலி சாரதி அனுமதிப்பத்திரங்களைத் தயாரித்த இரண்டு சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் பொரலஸ்கமுவ பகுதியைச் சேர்ந்தவர்கள் 43 மற்றும் 61 வயதுடையவர்கள் என தெரியவந்துள்ளது.

இந்த கைது நடவடிக்கை நுகேகொடை பிரிவு குற்றப் புலனாய்வுப் பணியகத்தினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களைக் கைதுசெய்து பொரலஸ்கமுவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இது தொடர்பில் பொரலஸ்கமுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# வரி வருவாய் இலக்கு அதிகரிப்பு

(கொழும்பு)

வரி அடிப்படையை விரிவுபடுத்துதல் மற்றும் வரி தாக்கல் செயல்முறையை எளிதாக்குதல் உள்ளிட்ட விடயங்களில் கவனம் செலுத்துவதற்காக நிதி அமைச்சும் உள்நாட்டு இறைவரித் திணைக்களமும் உயர்மட்ட கலந்துரையாடல்களை நடத்தியுள்ளது.

2025 ஆம் ஆண்டிற்கான அரசாங்கத்தின் திருத்தப்பட்ட வரி வருவாய் இலக்குகளை அடைவதற்கான உத்திகள் குறித்து இந்த விவாதம் கவனம் செலுத்தியது.

குறிப்பாக 2026 வரவுசெலவுத் திட்டத்தின்படி, இலங்கை தனது 2025 வரி வருவாய் இலக்கை ரூ. 4,590 பில்லியனில் இருந்து ரூ. 4,725 பில்லியனாக உயர்த்தியுள்ளது. இது 2.9% அதிகரிப்பாகும்.

வருமான வரி மற்றும் வாகன இறக்குமதி வரிகள் உட்பட பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி களிலிருந்து எதிர்பார்க்கப்படும் வருவாய் அதிகரிப்பதே இந்த திருத்தத்திற்குக் காரணம்.

2025 ஆம் ஆண்டிற்கான வருமான வரி இலக்கு 3.7% அதிகரித்து ரூ. 1,210 பில்லியனாகவும், பொருட்கள் மற்றும் சேவை வரிகளுக்கான இலக்கு 6.5% அதிகரித்து ரூ. 2,953 பில்லியனாகவும் உள்ளது. (நி)



# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1997- இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>7இல்செவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Hotel Management, Manager<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16329 | பிறப்பு-2000:இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>1இல்செவ்<br>கி-பா:34<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ: G/16343 |
| பிறப்பு:1996- இந்து<br>நட்சத்திரம்:பரணி<br>1இல் சூரி செவ்<br>உயரம்:5'11"<br>தகைமை/தொழில் -B.Engineer, Technician<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/16330 | பிறப்பு: 2001-இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி<br>கி-பா: 8 1/2<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Accountant<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/16344 |
| பிறப்பு:1992-இந்து<br>நட்சத்திரம்:விசாகம்<br>கி-பா-86 1/4<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்-A/L,Team Leader<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/16331 | பிறப்பு-1998-இந்து<br>நட்சத்திரம்-உத்தரம்<br>கி.பா: 59<br>3 இல் சூரிசெவ்<br>உயரம்-5'2"<br>தகைமை/தொழில்: Degree, Junior Assistant Engineer<br>எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/16346 |
| பிறப்பு: 1996- இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி-பா-32 1/2<br>7இல் செவ்<br>உயரம்:5'11"<br>தகைமை/தொழில்-QS<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/16332 | பிறப்பு-1995-இந்து<br>நட்சத்திரம்:புனர்பூசம்<br>8 இல் செவ்<br>கி.பா - 32<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் - A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/16355 |
| பிறப்பு: 1995- இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி-பா-04<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: Dip in Opththalmic, கண் பரிசோதகர்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: B/16333 | பிறப்பு-1996 - இந்து<br>நட்சத்திரம்-மிருகசீரிடம்<br>கி.பா: 26<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSC(IT), Work<br>எதிர்பார்ப்பு - Degree<br>தொ.இ: G/16357 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 498



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## அண்ணனும் தம்பியும்!

இரண்டு சிறுவர்கள். அவர்கள், இரண்டு பேரும் சகோதரர்கள்.

அந்த இரண்டு பேருக்குள்ளே ஏதோ ஒரு சின்ன மனஸ்தாபம்

அதனுடைய விளைவு என்ன ஆனது. இரண்டு பேரும் பேசிக் கொள்வதை நிறுத்திவிட்டார்கள். பிள்ளைகள் இரண்டு பேரும் பேசிக்கொள்வதில்லை என தெரிந்ததும் அவர்கள் அம்மாவுக்கு ரொம்ப வருத்தமாகிப் போனது. என்ன இது, இந்த பிள்ளைகள் இப்படி இருக்கிறார்களே என்று நினைத்து ரொம்ப வருத்தப்பட்டார்.

அந்த அம்மா யார்? அவர்தான் அன்னை பாத்திமா!

அந்தப் பிள்ளைகளின் பாட்டனார் யார்? நபிகள் நாயகம்!

இந்தப் பிள்ளைகளைப் பேச வைப்பது எப்படி. அந்தத் தாய் என்ன செய்திருக்கிறார்?

பிள்ளைகள் இரண்டு பேரையும் அழைத்து ஒன்றாக வைத்துக்கொண்டு அவர் பாட்டனார் நபிகள் நாயகம் அவர்களின் பொன்மொழி ஒன்றைச் சொல்லிக் காட்டுகிறார்கள்! அது என்ன பொன்மொழி.

"ஒரு முஸ்லீம் மற்றொரு முஸ்லீமுடன் மூன்று நாட்களுக்கு மேல் பேசாமல் இருந்தால் அது அவனைக் கொலை செய்வதற்கு ஒப்பாகும்!"

அப்படி என்பதுதான் அண்ணல் நபி அவர்கள் மொழிந்த பொன்மொழி இதை அந்த அம்மையார் தன்னுடைய பிள்ளைகளிடம் சொல்லிக் காட்டுகிறார்கள்.

அந்த இரண்டு பிள்ளைகள் யார் யார் தெரியுமா? மூத்தவர் ஹஸன். இளையவர் ஹூஸைன்.

தாயார் சொன்னதைக் கேட்டதும் இளையவர் ஹூஸைன் பேச ஆரம்பித்தார்.

"அம்மா! இப்படி பேசாமல் இருக்கின்ற இரண்டு பேரிலே எவர் முதலிலே சலாம் சொல்கிறாரோ அவருக்கே அதிக பலன் உண்டு. அப்படி என்றும் அண்ணல் நபி அவர்கள் சொல்லியிருக்கிறது எனக்குத் தெரியும்! அதனாலே அந்தப் பலன் அண்ணனுக்கு கிடைக்கட்டும் என்ற எண்ணத்திலே தான், நான் முதலிலே பேசாமல் இருக்கிறேன்!" என்றார்.

இதைக் கேட்டதும் மூத்தவர் ஹஸன் கண்களிலே ஆனந்தக் கண்ணீர். உடனே தம்பியைப் பார்த்து "சலாம்" சொன்னார். கட்டி அணைக்கிறார்.

தன் பிள்ளைகளுடைய அறிவையும் அரிய பண்பையும் பார்த்து அந்தத்தாய் மெய் மறந்து நிற்கின்றார்! அன்னை பாத்திமாவின் பிள்ளைகள் அப்படி! அது மாதிரி எல்லோரும் நடந்துக் கொள்ள வேண்டும். கருத்து வேறுபாடுகளை நீடிக்க விடக்கூடாது.

அதிகபட்சம் மூன்று நாட்களுக்கு மேலே ஒருவருக்கு ஒருவர் பேசாமல் இருக்கக்கூடாது!

ஒரு பள்ளிக்கூடத்திலே வகுப்பு நடந்துகொண்டிருக்கிறது இரண்டு சகோதரர்கள் அதிலே பாடம் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஷவ்கத் அலி அண்ணன்! முகம்மதலி - தம்பி! பீபி அம்மா பெற்ற பிள்ளைகள்.

அந்தச் சகோதரர்களை கொஞ்சம் சீண்டிப் பார்க்க வேண்டும் என்று நினைத்தார் ஆசிரியர். அதனாலே இப்படி ஆரம்பித்தார். அதாவது

"பிறந்தால் நாயாகப் பிற இளையவனாக மட்டும் பிறக்காதே! அதே மாதிரி பிறந்தால் கழுதையாகப் பிற மூத்தவனாக மட்டும் பிறக்காதே!" என்றார்.

இப்படி சொன்னதோடு நிறுத்தியிருந்தால் பரவாயில்லை. மேற்கொண்டும் சொன்னார்.

அப்படிப் பார்த்தால். இங்கே மூத்தவன் கழுதையாகிறான் இளையவன் நாயாகிறான். என்கிறார் அந்த ஆசிரியர் (மௌல்வி சகாவத் ஹூஸைன்)

உடனே முகம்மதலி எழுந்திரிக்கிறார் கோபமாக! தன்னை நாய் என்று சொன்னதற்காக கோபம் வந்துவிட்டது.

என்ன ஆகப்போகுதோ தெரியலையே என்று பயந்தார்கள் மற்ற மாணவர்கள். ஆனால் எழுந்தவர். என்ன சொன்னார் தெரியுமா?

"சார்! என்னை வேண்டும் என்றால் நாய் என்று சொல்லுங்கள்! பொறுத்துக் கொள்கிறேன். ஆனால் என் அண்ணனை மட்டும் கழுதை என்று சொல்லாதீர்கள். அதை என்னாலே பொறுத்துக்கவே முடியாது!" என்றார். அந்தக்குமுறலைக் கேட்டு ஆசிரியரே அசந்து போய் விட்டாராம்!

சகோதர பாசம் என்றால் இப்படி இருக்க வேண்டும். இந்தக் காலத்திலே இப்படியாக இருக்கிறது? ஒரு தடவை நம் ஆள் ஒருவன் பொலிஸ் ஸ்டேஷனுக்கு வந்து புகார் கொடுத்தான்.

"சார்! நாங்கள் அண்ணன், தம்பி ஆறுபேர். ஆறுபேரும் ஒன்றாக ஒரு சின்ன ரூமிலே இருந்து கொண்டிருக்கிறோம். இதிலே என்ன இடைஞ்சல்!

ஏனென்றால் ஒருவன் 12 குரங்கு வளர்க்கிறான்.

இன்னொருவன் 20 நாய்க்குட்டி வைத்திருக்கிறான். ஒரே நெரிசல் ரூமிற்குள்ளே காற்றே இல்லை. ரொம்பப் புழுக்கமாக இருக்கு, நீங்கள்தான் இதற்கு ஏதாவது வழி செய்ய வேண்டும்!" என்றான்.

"உங்கள் ரூமிலே ஜன்னல்கள் இருக்கிறதா?" என்று கேட்டார்கள் அவர்கள். "ஓ- இருக்கே!" என்றான்.

அவற்றைத் திறந்து வைக்க வேண்டியதுதானே!"என்றார்.

அது எப்படி சார் முடியும் ஜன்னல்களைத் திறந்துவிட்டால் நான் வைத்திருக்கும் 30 புறாவும் பறந்து வெளியிலே போய்விடுமே!" என்றார்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





Co- Impact Gender Fund ஆதரவுடன். Chrysalis நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பெண்கள் வணிகக் கூட்டணி (Women Mean Business). தனது 5 ஆவது கூட்டணி சந்திப்பு ஒக்டோபர் 29 அன்று நடைபெற்றது. இலங்கையின் நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில் (MSME) துறையில் பால்நிலை மாற்றத்தை ஏற்படுத்தும் சீர்திருத்தங்கள் விரைவுபடுத்துவதே இந்தக் கூட்டத்தின் நோக்கமாகும்.

# முதுமை பேணல்

முதுமை என்பது மனித வாழ்வியலின் நிறைவான காலமாகும். இப்பருவம் பட்டறிவு மிகுந்தது. பிறப்பு முதல் பெற்ற வாய்ப்புகளை மீள எண்ணிப் பார்க்க இக்காலத்தில் வாய்ப்புண்டு. மனித உடல் நிலையைப் பொறுத்த வரையில் முதுமைப் பருவம் மூன்று அடையாளங்களால் இனங் காணப்படும்.

அவை நரை, திரை, மூப்பு என்பனவாகும். நரை என்பது தலைமயிர் வெண்ணிறமாக மாறுவது. திரை என்பது கண்ணிலே வெண் திரை படர்வது. மூப்பு என்பது உடல் அயர்ச்சி அடைவது. இவற்றோடு "பிணி" என்னும் நிலையும் உண்டு. பிணி என்பது தீராத நோயால் பிணிக்கப்பட்டு இருத்தல் எனவே இந் நிலையில் வாழும் முதியவர்களைப் பேண வேண்டிய பொறுப்பு எல்லோருக்கும் உண்டு.

தமிழர் பண்பாட்டில் முதுமை பேணல் வாழ்வியலின் ஒரு பகுதியாக இருந்தது. மூன்று தலைமுறையினர் ஒரு வீட்டில் ஒன்றாகக் கூடி வாழ்ந்தமையால் முதுமைப் பருவத்தோர் சிறப்பாகப் பேணப்பட்டனர். அவர்களது அகவையும் பட்டறிவும் சிறப்பாக எவ்லோராலும் மதிக்கப்பட்டன. பெண்களின் வளர்ச்சி நிலையில் இப்பண்பு தெளிவாகவே வெளிப்பட்டது. மகள், தாய், பாட்டி என்ற நிலைகளில் முதுமையின் நிறைவை நன்குணர முடிகிறது.

தாய் வயிற்றில் பிறந்த மகளும் மகள் வயிற்றில் பிறந்த பேர்த்தியும் வளர்ச்சிப்படி நிலைகளை விளக்கி நின்றனர். பெண்ணின் கடமைகளில் இன்றியமையாதது தலைமுறைக் கையளிப்பாகும். தனது கடமைகளையும் உரி மைகளையும் செயற்பாடுகளையும் அடுத்த தலைமுறைக்குக் கையளிப்புச் செய்வதில் பெண் சிறப்பாகப் பணி செய்தார். வீட்டு நிர்வாகம், குழந்தை வளர்ப்பு, பண்பாட்டுபயிற்சி, தொடர்பாடல் என்பவற்றைக் கையளிப்பதில் திறனோடு செயற்பட்டாள். அவள் கொடுக்கின்ற பயிற்சியில் முதுமை பேணலும் இடம் பெற்றிருந்தது.

முதுமைக் காலத்தில் உடல்நிலையில் ஏற்படும் குறைபாடுகளில் செவிப்புலன், கட்புலன், கேள்விப்புலன், நினைவுப்புலன் இழப்புகள் தவிர்க்க முடியாதவை. சிலருக்கு நடமாட முடியாத நிலையும் ஏற்படுவதுண்டு. அத்தகைய முதியோரின் தேவைகளை நிறைவேற்றும் சேவை மனப்பான்மை பெண்களிடையே இயற்கையாக உள்ளது. அதனால் பெண் முதுமையைப் பராமரிப்பதிலும் பேணுவதிலும் மிகுந்த ஈடுபாட்டோடு செயற்படும் ஆற்றலுடையவளாக விளங்கினாள்.

முதுமையைப் பேணுவதற்கு இன்னொரு தனித்துவமான சூழலும் இன்று தோன்றியுள்ளது. தமிழர் வாழ்விடங்களில் ஏற்பட்ட புலப்பெயர்வு பல முதியோர்களைத் தனிமைப் படுத்தியுள்ளது. அவர்களுடைய பிள்ளைகள் நாட்டுச் சூழல் காரணமாகப் புலம் பெயர்ந்த போது வயதான பெற்றோரை வாழ்விடங்களிலே விட்டு விட்டுச் சென்றனர். அவ்வாறு விட்டுச் சென்ற போது முதியவர்கள் தனிமையிலே வாழ நேர்ந்தது.

இதனால் அவர்கள் பாரிய உளத் தாக்கத்திற்கு ஆளாகினர். சிலர் நினைவிழந்து துன்புற்றனர். பலர் பிணிக்கு ஆளாகினர்.

இத்தகைய நிலையிலுள்ள முதியோர்களை ஓரிடத்திலே வைத்துப் பேணுவதற்கு முதியோர் இல்லங்கள் அமைக்கப் பட்டன.

அங்கு முதியோர் ஒரு மருத்துவ விடுதியிலே இருப்பது போன்ற உணர்வுடையவராகவே வாழ்கின்றனர். அவர்களுக்கு ஒரு மகிழ்வான வாழ்க்கைச் சூழலை ஏற்படுத்த வேண்டும். அதற்காகப் பலரைப் பயிற்ற வேண்டும்.

முதியவர்களிடம் பல தகவல்களையும் செய்திகளையும் நாம் அறியவோம். அவர்கள் வாழ்ந்த காலத்தில் நடந்த வரலாற்று நிகழ் வுகளையும் நடை முறைகளையும் நாம் கேட்டுப் பதிவு செய்ய வேண்டும்.

இதைவிட சில கைவினைத் திறன்களையும் தொழில் நுட்பத்தையும் நாம் அறிந்து கொள்ள ஏற்ற முயற்சிகளைச் செய்ய வேண்டும். அவர்களுடைய அறிவுரைகளை நேர்காணல் மூலமாகக் கேட்டறிந்து பதிவு செய்து வைக்கலாம்.

முதுமை எல்லோரை யும் வருத்துவதில்லை. பல முதியவர்கள் தனிமையாக வாழ்ந்தாலும் தம்முடைய அறிவு நிலையான விடயங்களோடு மகிழ்வாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்களையும் பேண வேண்டும். அவர்களுக்குத் தேவையானவற்றைச் செய்து கொடுக்க வேண்டும். இன்னும் முதுமையையும் இளமையையும் ஒன்றிணைத்துப் பணி செய்யக் கூடியவாய்ப்புகளையும் உருவாக்க வேண்டும்.

இன்று முதுமை பேணல் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். காலத்திற்கு ஏற்ற வகையில் அதற்கான செயற்றிட்டங்களை உருவாக்கிச் செயற்பட வேண்டும். தமிழர் பண்பாட்டில் முதுமை வழிபாட்டிற்குரிய சிறப்பு நிலையாகவே கருதப்பட்டது. அந் நிலையே என்றும் பேணப்பட வேண்டும்.

வெள்ளி நற்சிந்தனை 17



முனைவர் ச.மனோன்மணி

# இராசிபலன்

12.12.2025
கார்த்திகை 26, வெள்ளிக்கிழமை
அட்டமி முன்னிரவு 8.02 மணி வரை

பூரம் முற்பகல் 9.18 மணிவரை
சுப நேரம் 6.20-7.50 மணிவரை
இராகுகாலம் 10.50-12.20 மணிவரை

சந்திராஷ்டமம்- அவிட்டம்.

வளவன்




வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள்.




பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள், கனவுகள் நனவாக கற்பக மூர்த்தியை வணங்க வேண்டிய நாள்.





தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள், வாகன சுகமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.




வழிபாட்டில் ஆர்வம் கூடும், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், போசன சுகமுண்டு.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.




விரும்பிய உணவுப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.




வழிப்பாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.




குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகள் அனுகூலம் தரும்.




செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் உங்களின் முன்னேற்றம் கண்டு ஆச்சரிப்படுவர், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.




உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும் மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்வீர்கள்.




கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், நிதானத்தடன் நடந்து நிம்மதி காண வேண்டிய நாள், குடும்பப் பொறுப்புக்கள் கூடும்.




சொந்த பந்தங்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், நட்பு வட்டம் விரிவடையும் நாள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

தனக்கே உதவாதவன் பிறருக்கு என்ன செய்வான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 931





குந்தவை தன் முழுத் திறமையையும் ஊமைராணியை அலங்கரிப்பதில் பயன்படுத்தியிருந்தாள். அடி உள்ளத்தில் தோன்றிய ஏதோ ஓர் உருத்தெரியாத உணர்ச்சியினால் மந்தாகினியின் தலைக் கூந்தலை நந்தினியைப்போல் ஆண்டாள் கட்டுடன் அலங்கரித்திருந்தாள். இந்த அலங்காரம் முடிந்ததும் பெண்கள் எல்லோருக்குமே அவள் தத்ரூபமாக நந்தினியைப் போலிருந்தது தெரிந்து விட்டது.

காட்டிலே அலைந்து திரிந்த தேக ஆரோக்கியமுள்ள மாதரசியாதலால் பிராயத்திலே இருந்த இருபத்தைந்து வருட வித்தியாசம் கூடத் தெரியவில்லை. மற்றப் பெண்மணிகள் மந்தாகினி தேவியைச் சிறிது பெருமையுடனேயே அழைத்துக் கொண்டு வந்தார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்தினால் பெருமை கொண்டிருந்தார்கள்.

இந்தச் சரித்திரம் நிகழ்ந்த நாட்களில் தமிழகத்துப் பேரரசர்களும் குறுநில மன்னர்களும் பல மனைவியரை மணப்பது சகஜமாயிருந்தது. ஓயாமல் போர்கள் நடந்த வண்ணமாயிருந்தன. அரசிளங் குமாரர்களோ போர் முனையில் எப்போதும் முன்னணியில் இருந்தார்கள். ஆகையால் குலம் நசிக்காமல் பாதுகாப்பதற்காக அரச குலத்தவர் பெண்கள் பலரை மணப்பது வழக்கமாயிருந்தது. பட்ட மகிஷியாயிருப்பவள் மற்ற ராணிகளிடம் அசூயை கொள்ளாமல் அணைத்து ஆதரிப்பது ஒரு சிறந்த நறுங் குணமாகக் கருதப்பட்டது.

இந்த முறையிலேயே மலையமான் மகள் உற்சாகமாயிருந்தாள். குந்தவை தன்னுடைய அலங்காரத் திறமையை இவ்வளவு நன்றாகக் காட்ட முடிந்தது பற்றிப் பெருமை கொண்டிருந்தாள். பைத்தியக்காரப் பிச்சியாகத் தோன்றியவளை இணையில்லா அழகு வாய்ந்த இளம் பெண்ணாகத் தோன்றும் படியல்லவா அவள் செய்துவிட்டாள்? பூங்குழலிக்கோ தன் அத்தைக்கு அரண்மனையில் இவ்வளவு இராஜோபசாரங்கள் நடப்பது பற்றிக் களிப்பு உண்டாகியிருந்தது. அவள் எதிர்பார்த்ததற்கெல்லாம் மாறாக இங்கேயுள்ள அரண்மனைப் பெண்கள் நடந்து கொண்டிருந்தார்கள் அல்லவா?

இவ்வாறு பெருமிதம் பொங்க அந்த அறையினுள் பிரவேசித்த பெண்களின் ஊர்வலத்தைச் சக்கரவர்த்தி பார்த்தார். அவருடைய சிரிப்பு அந்த கணமே நின்று விட்டது. மந்தாகினியின் புதிய தோற்றம் அவருக்கே அளவில்லாத பிரமிப்பை அளித்தது. தாம் கண் முன்னால் பார்ப்பது உண்மைதானா என்று சந்தேகிப்பவர்போல் கண்களைக் கையினால் சிறிது மூடிக் கொண்டும் பின்னர் திறந்தும் உற்று உற்றுப் பார்த்தார். சற்று முன்னால் முதன்மந்திரி சொல்லிக் கொண்டிருந்த விபரங்கள் எல்லாம் அவர் மனத்தில் பதிந்திருந்தன. சில காலமாக நள்ளிரவில் தன் எதிரே தோன்றித் தன்னை வருத்திய பெண் உருவத்துக்கும் மந்தாகினியின் உருவத்துக்கும் உள்ள ஒற்றுமை அவருக்கு நன்கு புலனாயிற்று. அதே சமயத்தில் சில வேற்றுமைகள் இருப்பதையும் கவனித்துக் கொண்டார். இதைப் பற்றிய மர்மத்தை முழுவதும் ஆராய்ந்து உண்மையை அறிய வேண்டும் என்னும் ஆசை அவர் உள்ளத்திலும் உதயமாயிற்று. மந்தாகினி மீது அவருக்கு முதலில் ஏற்பட்டிருந்த அருவருப்பு அப்படியே மாறாமல் இருந்தது. தொடரும்...



# சிறுவர் அரங்கம்

## ஒற்றுமையே வலிமை



வயது முதிர்ந்த விவசாயி ஒருவருக்கு நான்கு மக்கள் இருந்தனர். அந்த நால்வரும் ஒற்றுமை இல்லாமல் எப்பொழுதும் சண்டையும் சச்சரவுமாக இருந்தனர்.

இவர்கள் இப்படியே இருந்தால் குடும்பம் சிதறிப் போகுமே என்று வருந்தினார் வயதான தந்தை.

அவர் கூறிய புத்திமதிகளை மதிக்காமல் திரிந்தனர். ஒருநாள் மக்கள் நால்வரையும் அழைத்தார் தந்தை அவர்கள் வந்து கட்டிலைச் சுற்றி நின்றனர்.

தன் காலடியில் கிடந்த மூங்கில் கட்டு ஒன்றை மூத்த மகனிடம் கொடுத்து, "இதை முறி" என்றார்.

தன் பலம் முழுவதையும் பயன்படுத்தினான். ஆனால், முறிக்க முடியவில்லை.

அடுத்து இரண்டாவது மகன், மூன்றாவது மகன், நான்காவது மகன், மூவரும் முயன்று பார்த்தனர் ஒருவராலும் முறிக்க இயலவில்லை.

பிறகு கட்டைப் பிரித்து ஆளுக்கு ஒரு குச்சியைக் கொடுத்தார்.

நால்வரும் சுலபமாக முறித்து விட்டு நின்றனர்.

"இப்படித்தான் உங்கள் வாழ்க்கையும் அமையும், நீங்கள் நால்வரும் ஒற்றுமையாக இருப்பீர்களானால் உங்கள் வாழ்க்கை உறுதியாக விளங்கும்.

எவரும் உங்களை ஏமாற்ற முடியாது. சண்டை சச்சரவு செய்து, தனித் தனியாக ஆளுக்கு ஒரு பக்கமாக இருப்பீர்களானால் சிதறிப் போவீர்கள். ஒற்றுமையே வலிமை அளிக்கும்" என்றார் தந்தை.

நாட்டுக்கும், குடும்பத்துக்கும், சமூகத்துக்கும் இது பொருந்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு ஒரு விஷயத்தைப் புரிய வைக்கிறது,
ஆனால் அனுபவமே அதை உணர வைக்கிறது.
~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மக்களின் மனங்களை வெல்வது எப்படி என்றறிக!

எங்கள் தமிழ் அரசியல் இப்போது ஏளனத்துக்குரியதாகிவிட்டது.

அந்தளவுக்கு நம் தமிழ் அரசியல்வாதிகள் மலினப்பட்டுவிட்டனர்.

இதற்குக் காரணம் நமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை நாம் சரிவரப் பயன்படுத்தாததே.

ஆம், மக்கள் வழங்கிய ஆணையை நம் அரசியல்வாதிகள் தங்களின் தனியுரிமையாக நினைத்துக் கொண்டனர்.

உண்மையில் விடுதலைப் போராட்டம் மௌனித்ததன் பின்னர் தமிழ் மக்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியை மலையாக நம்பினர்.

அதிலும் தமிழரசுக் கட்சியின் தலைமையில் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளும் சேர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கியபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கடந்து இன்னொரு அரசியல் கட்சி தமிழர் தாயகத்தில் நுழைய முடியாமல் போயிற்று.

அந்தளவுக்கு தமிழரசுக் கட்சியை - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழ் மக்கள் முழு மனத்தோடு ஆதரித்தனர்.

என்ன செய்வது எங்கள் கெடுகாலம் தமிழரசுக் கட்சி இரா.சம்பந்தரின் கைக்குள் போக, அவர் ஒரு சர்வாதிகாரிபோல நடந்து கொண்டார்.

உண்மையைக் கூறப்போனால் தனக்குக் கிடைத்த அருமந்த சந்தர்ப்பத்தை இரா.சம்பந்தர் போட்டுடைத்தார் என்றே கூறவேண்டும்.

இன்று தமிழ்க் கட்சிகள் சிதறிக் கிடப்பதற்கும் மலினப்பட்டுப் போவதற்கும் மூலகாரணம் இரா.சம்பந்தர் என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

ஆம், மாகாண சபைத் தேர்தல் நடைபெற்ற போது, வடக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் ஆதரித்தனர்.

அந்தத் தேர்தலில் , நடக்க இயலாதவர்களும் தவழ்ந்து சென்று தமது வாக்கை அளித்தனர்.

ஆனால் ஈற்றில் நடந்தது என்ன? தமிழரசுக் கட்சி கர்வமடைந்தது. தமிழ் மக்கள் தொடர்ந்தும் தமது கட்சியையே ஆதரிப்பர் என்று கணித்தது.

அந்த நினைப்பு அவர்களை மமதை கொள்ளச் செய்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்தது. இரா.சம்பந்தர் தன்னிச்சையாக நடந்து கொண்டார். எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்காக விலை போனார்.

மகிந்த ராஜபக்ஷ தரப்புக்கு மறைமுகமாக ஆதரவு வழங்குவதை தனது மிகப்பெரிய இராஜதந்திரம் என நினைத்தார்.

அதை நம் தமிழ்த் தரப்புகளும் அவரோடு இருந்த தமிழ் அரசியல்வாதிகளும் அவரைப் போலவே நினைத்தனர்.

ஈற்றில் தான் தெரிந்தது, எதிர்க்கட்சித் தலைவருக்காக அரசாங்கம் வழங்கிய மாளிகையில் தான் தொடர்ந்தும் குடியிருப்பதற்காகவே அவர் தமிழர்களுக்குக் கிடைத்த அத்தனை சந்தர்ப்பங்களையும் விட்டுக் கொடுத்தார் என்ற உண்மை.

ஆம், தமிழ் மக்களின் பேராதரவைப் பெற்ற இரா.சம்பந்தர் தலைமையிலான தமிழரசுக் கட்சி கர்வம் கொண்டு எல்லாவற்றையும் போட்டுடைத்துவிட்டது.

ஆனால், சிங்கள மக்களின் பேராதரவைத் தனதாக்கிய அநுர குமார திஸாநாயக்க ஒட்டுமொத்த இலங்கை மக்களின் ஆதரவைப் பெறுகின்ற அளவில் தன்னை மக்கள் தொண்டனாக ஆக்கி களத்தில் இறங்கி சாதனை படைக்கிறார்.

இங்குதான் மக்களின் மனங்களை வெல்வது எப்படி என்பதை ஜனாதிபதி அநுரவிடம் இருந்து நம் தமிழ் அரசியல்வாதிகள் கற்றுக் கொள்ள வேண்டும்.

# வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளை செயற்திறனுடன் பயன்படுத்துங்கள்

## அதிகாரிகளுக்கு பிரதமர் ஹரிணி ஆலோசனை

(கொழும்பு)

அனர்த்த நிலைமையின் பின்னரான நாட்டைக் கட்டியெழுப்பும் செயன்முறையில்வரவு செலவுத் திட்டத்திலுள்ள ஒதுக்கீடுகளை உச்ச செயற்திறனுடன் பயன்படுத்துமாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அனர்த்த நிலைமையின் பின்னர் தொழில்சார் கல்வி முறைமையை வழமை நிலைக்குக் கொண்டுவருவதற்கான உபாயங்களை வகுத்தல் மற்றும் கல்விச் சீர்திருத்தச் செயற்திட்டத்திற்கு இணங்க தொழில்சார் கல்வியைப் பலப்படுத்துதல் தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சர் ஹரிணி அமரசூரியவின் தலைமையில் நாராஹேன்பிட்டிய தொழில் கல்வி அமைச்சில் நடைபெற்றது. இதன்போதே பிரதமர் குறித்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

குறித்த கலந்துரையாடலில்அனர்த்த நிலைமையின் பின்னர் நாட்டைக் கட்டியெழுப்பும் செயன்முறையில் தொழில்சார் கல்வி கற்கும் மாணவர்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் இம்முறை வரவுசெலவுத் திட்டத்தில் தொழில்சார் கல்வியை மேம்படுத்துவதற்காக அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பிரதமர் அதிலிருந்து அதிகபட்ச பலனைப் பெறும் வகையில் ஒவ்வொரு தொழில்சார் கல்வி நிறுவனமும் தமது பொறுப்பைக் கைவிடாது ஒழுங்கமைப்போடு செயற்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

அத்துடன் நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட அனர்த்த நிலைமையினால் சேதமடைந்த தொழிற்பயிற்சி நிறுவனங்களை விரைவாக வழமைநிலைக்குக்கொண்டுவருதல், மாணவர்கள் மீண்டும் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது. (ம-7)

### வடக்கு ஆளுநரின்

## வாராந்த பொதுமக்கள் சந்திப்பு ஒத்திவைப்பு

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களின் வாராந்த பொதுமக்கள் சந்திப்பு எதிர்வரும் திங்கட்கிழமை (15) நடைபெற மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், அதற்கு அடுத்த வாரம் திங்கட்கிழமை (22) வழமை போன்று ஆளுநர் செயலகத்தில் பொதுமக்கள் சந்திப்பு இடம்பெறும் என்றும் பொதுமக்கள் இந்த மாற்றத்தைக் கவனத்திற் கொண்டு தமது வருகையைத் திட்டமிட்டுக் கொள்ளுமாறும் ஆளுநரின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

(ம-7)

## யாழில் சீரற்ற காலநிலை விமான சேவைகள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக விமான சேவைகள் பாதிப்படைந்துள்ளன.

சீரற்ற காலநிலை காரணமாக சென்னையில் இருந்து யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த பயணிகள் விமானம் ஒன்று இங்கு தரையிறங்க முடியாமல் மீண்டும் சென்னைக்கே திரும்பியுள்ளது.

கடும் மழை மற்றும் அதனைத் தொடர்ந்து வானில் ஏற்பட்ட அடர்த்தியான மூடுபனி காரணமாக விமானம் யாழ்ப்பாணத்தை அண்மித்த போதும் தரையிறங்குவதற்கு ஏதுவான தெளிவான பார்வை கிடைக்காத காரணத்தினால் சென்னைக்கு மீளத் திரும்பியதாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை கொழும்பிலிருந்து வடமாகாணத்திற்கான நிவாரணப் பொதிகளை ஏற்றி வரும் அமெரிக்க விமானம் சீரற்ற வானிலைக்கு மத்தியிலும் நேற்றும் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து நிவாரணப் பொருட்களைக் கையளித்துச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## சாவகச்சேரியில் மின்வெட்டு

சாவகச்சேரி பிரதேசத்தின் சில பகுதிகளில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (14) அன்று அவசரத் திருத்த வேலைகளை முன்னிட்டு மின்சாரம் தடைப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மின்சாரம் துண்டிக்கப்படும் எனவும் அவசர பராமரிப்பு மற்றும் திருத்தப் பணிகள் காரணமாகவே மின் விநியோகம் தடைப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பொது மக்கள் தமது நாளாந்த நடவடிக்கைகளை அதற்கு ஏற்றவாறு திட்டமிட்டுக்கொள்ளுமாறும் மின்சார சபை அறிவுறுத்தியுள்ளது.

(ம-7)

### நயினாதீவு - குறிகாட்டுவான்

## படகு சேவையின் நேரங்கள் மாற்றம்

சீரற்ற காலநிலை காரணமாக நயினாதீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையிலான படகு சேவையின் நேர அட்டவணை திருத்தப்பட்டுள்ளதாக நயினாதீவு தனியார் படகு உரிமையாளர்கள் சங்கம் நேற்று அறிவித்துள்ளது.

இது குறித்து அச்சங்கம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் நயினாதீவில் இருந்து குறிகாட்டுவான் வரை காலை 6.30 மணி தொடக்கம் 8.00 மணிவரை அரை மணித்தியாலயத்துக்கொரு சேவையும் 8.30 மணியிலிருந்து 5.00 மணி வரையும் ஒரு மணித்தியாலயத்துக்கொரு சேவையும் இடம்பெறும்.

அவ்வாறே குறிகாட்டுவானிலிருந்து நயினாதீவு வரை காலை 7.30 மணி தொடக்கம் 8.30 மணி வரை அரை மணித்தியாலயத்துக்கொரு சேவையும் அதன் பின்னர் மாலை 5.30 மணி வரை ஒரு மணித்தியாலயத்துக்கொரு சேவையும் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

## மாத்தளையில் நீடிக்கும் நிலச்சரிவு அபாயம்

### 400 குடும்பங்கள் உடனடி வெளியேற்றம்

மாத்தளை மாவட்டத்தில் அண்மைக் காலமாக நிலவும் பலத்த காற்று மற்றும் கனமழை காரணமாக மண்சரிவு மற்றும் பாறைகள் விழும் அபாயம் தீவிரமடைந்துள்ளது எனத் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் நேற்று (11) புதிய எச்சரிக்கையை விடுத்துள்ளது.

அதில் தொடந்தெனிய மலையில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளதால் பாறைகள் விழும் அபாயம் மற்றும் மண்சரிவு அபாயம் இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் அப்பகுதியிலிருந்து சுமார் 400 குடும்பங்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு உடனடியாக அப்புறப்படுத்துமாறு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாராளுமன்றத்தில் பெண்களின் அரசியல்

15

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

**என்.எஸ். பெரேரா**

களனி தொகுதியில் என். எஸ். பெரேரா திறப்புச் சின்னத்தில் போட்டியிட்டு 1,769 வாக்குகள் பெற்று தோல்வியடைந்தார். வெற்றி பெற்றவர் (JR) 10,827 வாக்குகளைப் பெற்றார்.

**பி. சோமாவதி மேத்யூ**

ஹக்மான தொகுதியில் திருமதி பி. சோமாவதி மேத்யூ குடைச் சின்னத்தில் போட்டியிட்டு 2,728 வாக்குகள் பெற்று தோல்வியடைந்தார். வெற்றிபெற்றவர் 9,083 வாக்குகளைப் பெற்றார்.

**லிலியன் பீரிஸ்**

பதுளை தொகுதியில் லிலியன் பீரிஸ் யானைச் சின்னத்தில் போட்டியிட்டு 3,549 வாக்குகள் பெற்று தோல்வியடைந்தார். வெற்றி பெற்றவர் 4,775 வாக்குகளைப் பெற்றார்.

**குசுமசிறி குணவர்தன**

கிரியெல்ல தொகுதியில் குசுமசிறி குணவர்தன வண்டிச் சக்கரம் சின்னத்தில் போட்டியிட்டு 3,906 வாக்குகள் பெற்று தோல்வியடைந்தார். வெற்றிபெற்றவர் 6,816 வாக்குகளைப் பெற்றார்.

**கமனி மீதெனிய**

இரத்தினபுரி தொகுதியில் கமனி மீதெனிய திறப்புச் சின்னத்தில் போட்டியிட்டு 3,047 வாக்குகள் பெற்று தோல்வியடைந்தார். வெற்றிபெற்றவர் 7434 வாக்குகளைப் பெற்றார்.

**ரூபா குணவர்தன**

கொலன்னாவ தொகுதியில் ரூபா குணவர்தன திறப்புச் சின்னத்தில் போட்டியிட்டு 3,582 வாக்குகள் பெற்று தோல்வியடைந்தார். வெற்றிபெற்றவர் 8608 வாக்குகளைப் பெற்றார்.

**நினா விஜேசூரிய**

மொரட்டுவ தொகுதியில் திருமதி நினா விஜேசூரிய விளக்குச் சின்னத்தில் போட்டியிட்டு 2,137 வாக்குகள் பெற்று தோல்வியடைந்தார். வெற்றிபெற்றவர் 10262 வாக்குகளைப் பெற்றார்.

**ஏ.பி ஜயதிலக்க**

மஸ்கெலியா தொகுதியில் ஏ.பி ஜயதிலக்க குடைச் சின்னத்தில் போட்டியிட்டு 194 வாக்குகள் பெற்று தோல்வியடைந்தார். வெற்றிபெற்றவர் 4192 வாக்குகளைப் பெற்றார்.

1960 மார்ச்சில் உருவாக்கப்பட்ட நான்காவது பாராளுமன்றத்தின் ஆயுட் காலம் 33 நாட்கள் மட்டுமே நீடித்தது.

இத் தேர்தலில் போட்டியிட்ட பெண் வேட்பாளர்களை கட்சி ரீதியாகப் பின்வருமாறு வகைப்படுத்தலாம். லங்கா சமசமாஜகட்சி-5, ஐக்கிய தேசிய கட்சி- 3, இலங்கை ஜனநாயக் கட்சி-2, மக்கள் ஐக்கிய முன்னணி-1, தொழிற்கட்சி-1, தேசிய விடுதலை முன்னணி-1, சுயேட்சை-1

**ஐந்தாம் இலங்கை பாராளுமன்றத் தேர்தல், ஜூலை 1960**

இத் தேர்தலின் போது ஸ்ரீ.ல.சு.க.வின் தலைவராக இருந்த சி.பி.டி.சில்வா தலைமைப் பதவியிலிருந்து விலகி, திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை அப் பதவியை ஏற்கச் செய்தார். அதன் பின் சிறிமாவோ பண்டார நாயக்கா தலைமையிலான ஸ்ரீ.ல.சு.க. ஜூலை தேர்தலுக்காக ஏனைய இடது சாரிக் கட்சிகளுடன் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் செய்து கொண் டது. இத் தேர்தலின் போது திருமதி சிறிமா பண்டாரநாயக்கா போட்டியிடவில்லை. இலங்கையின் தேர்தல் வரலாற்றில் கட்சியொன்று ஒரு பெண் தலைமையில் தேர்தலில் பங்கு பற்றிய முதற் சந்தர்ப்பம் இது தான்.

சிறிமாவோ பண்டாரநாயக்கா தனது கணவரின் கொள்கைகளை, குறிப்பாக சிங்களம் மட்டும் சட்டம், இலங்கையின் இந்தியத் தமிழர்களை இந்தியாவுக்கு நாடு கடத்தல் போன்றவற்றை முன்னெடுக்கப்போவதாகத் தேர்தல் பரப்புரைகளில் கூறி வந்தார். டட்லி சேனநாயக்காவின் ஐக்கிய தேசியக் கட்சியும் சிறுபான்மை மக்களைப் பொறுத்த வரை சுதந்திரக் கட்சியின் கொள்கைகளையே கொண்டிருந்தது. அதே வேளையில், சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாறாக இடது சாரிப் போக்கைத் தமது பொருளாதாரக் கொள்கைகளில் கொண்டிருந்தது. தனியார் துறை மற்றும் சமயப் பாடசாலைகளை அரசுடமையாக்கல் இக்கட்சியின் முக்கிய கொள்கையாக இருந்தது.

சுதந்திரக் கட்சி பெரும்பான்மைப் பலத்தைப் பெற்று ஆட்சியைப் பிடித்தது. பண்டாரநாயக்கா இலங்கைப் பிரதமரானார். இத் தேர்தல் இலங்கையில் மட்டுமல்ல முழு உலகத்திலுமே முக்கியத்துவம் பெற்றது. இலங்கையில் மட்டுமல்ல முழு உலகத்திலுமே முதலாவது பெண் பிரதமராக திருமதி பண்டாரநாயக்க தேர்ந்தெடுக்கப்பட்டமையே சர்வதேச அரங்கில் முக்கியத்துவத்தைப் பெற காரணமாயிற்று.

பண்டாரநாயக்க கட்சித் தலைவர் (SLFP) என்ற ரீதியில், 1960 யூலை 21 ஆம் திகதி பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டார். ஆனால், இவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இல்லாத காரணத்தினால், பிரதம மந்திரியாகத் தொடர்ந்திருப்பதை இயலுமாக்குவதற்காக 1960 ஓகஸ்ட் 02 ஆம் திகதி செனற் சபையில் ஓர் உறுப் பினராக நியமிக்கப்பட்டார்.

இத் தேர்தலில் 5 பெண் வேட்பாளர்கள் போட்டியிட்டனர். அதில் இருவர் மட்டுமே வெற்றி பெற்றனர். ஊவா பரணகம தொகுதியில் போட்டியிட்ட குசுமா ராஜரத்தினவும் (பெற்ற வாக்குகள் 6473) லங்கா சமசமாஜக் கட்சியின் சார்பில் தெஹியோவிட்ட தொகுதியில் போட்டியிட்ட சோமா விக்கிரமநாயக்கவுமே (பெற்ற வாக்குகள் 8593) ஆகிய இருவருமே வெற்றி பெற்றனர்.

கொழும்பு வடக்கு தொகுதியில் விவியென் குணவர்தன திறப்புச் சின்னத்தில் போட்டியிட்டு 11,363 வாக்குகள் பெற்று தோல்வியடைந்தார். வெற்றிபெற்ற வர் 11,507 வாக்குகளைப் பெற்றார். கலிகமுவ தேர்தல் தொகுதியில் போட்டியிட்ட விமலா தோல்வியடைந்தார் (பெற்ற வாக்குகள் 9791). வெற்றிபெற்றவர் 10,873 வாக்குகளைப் பெற்றார். தெஹியோவிட்ட தொகுதியில் குசும சிறி குணவர்தன வண்டிச் சக்கரம் சின்னத்தில் போட்டியிட்டு 481 வாக்குகள் பெற்று தோல்வியடைந்தார்.

1961ம் ஆண்டு குருணாகல் தொகுதியில் நடந்த இடைத் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராக சூரியன் சின்னத்தில் போட்டியிட்ட தம்மிட்ட ஏ.பீ. குமாரிஹாமி தோல்வியடைந்தார். நான்கு வேட்பாளர்களோடு போட்டியிட்ட தம்மிட்ட ஏ.பீ.குமாரிஹாமி 147 வாக்குகளை மாத்திரமே பெற்றார்.

1964 ஆம் ஆண்டு பொரளைத் தேர்தல் தொகுதிக்கு நடைபெற்ற இடைத் தேர்தலில் திருமதி விவியென் குணவர்தன 12,592 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். 12,106 வாக்குகள் பெற்ற ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளர் தோல்வியடைந்தார். இவ் இடைத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிட்ட இன்னொரு பெண் வேட்பாளரான கமலா டி சில்வா 1,356 வாக்குகள் பெற்று தோல்வியடைந்தார். அதன் பின்னர் விவியென் குணவர்தனவுக்கு உள்நாட்டு அலுவல்கள் பிரதியமைச்சர் பதவி கிட்டியது.

டொக்டர் டபிள்யூ.டி.டி. சில்வாவின் மரணத்தைத் தொடர்ந்து வெற்றிடமான பொரளை தொகுதியில் இடம்பெற்ற இடைத் தேர்தலில் காலஞ்சென்ற முன்னாள் உறுப்பினர் டொக்டர் டி.டி. சில்வாவின் மனைவியை அத் தொகுதியில் போட்டியிடச் செய்தால் அனுதாப வாக்குகளைப் பெறச் செய்து வெற்றி பெறச் செய்யலாம் எனக் கருதிய சுதந்திர சோஷலிச முன்னணியினர் டொக்டர் சில் வாவின் மனைவி கமலா டி சில்வாவை வேட் பாளராக நிறுத்தியிருந்த போதும் அவர் தோற்றுப் போனார்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீ விபத்து...

ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் ஹாட்லிக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய பருத்தித்துறை ஐயனார் வீதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயாரான நித்திலவர்ணன் நிஷாந்தி (வயது-44) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த செவ்வாய்க்கிழமை (09) தீ விபத்தில் எரிகாயங்களுக்குள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை (10) இரவு 10.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன்தயான் விசாரணைகளை மேற்கொண்டார்.

கறையானுக்கு ஸ்பிறே மூலம் மண்ணெண்ணையை விசிறியதாகவும் பின்னர் நுளம்புத் திரியைப் பற்ற வைத்தபோது ஆடையில் தீ பற்றியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,60)

## பள்ளத்தில்...

பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மன்னார் - கற்கிடந்தகுளம் கிராமத்தைச் சேர்ந்த முருங்கன் மத்திய கல்லூரியில் உயர்தரப் பிரிவில் கல்வி கற்கும் மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

15 அடி நீர் நிரம்பிய பள்ளத்தில் தவறுதலாக விழுந்து குறித்த மாணவன் உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவனின் சடலம் நேற்று முன்தினம்மீட்கப்பட்ட நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## கிணற்றடியில்...

பகுதியில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த சிவலிங்கம் வரதன் (வயது-24) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை (10) கை கழுவுவதற்காக கிணற்றடிக்குச் சென்றபோது வழுக்கி விழுந்து தலையில் படுகாயமடைந்த நிலையில் மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று வியாழக் கிழமை (11) அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன்தயான் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## பொலிஸ்...

பெற்ற ஆட்டோ விபத்தில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த பத்மநாதன் ஜதர்சன் (வயது-31) என்பவரே உயிரிழந்தவராவார்.

நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் இருந்து விடுமுறையில் சென்ற அவர் நேற்று முன்தினம் புதன்கிழமை (10) இரவு முச்சக்கரவண்டியில் சென்று கொண்டிருந்தபோது வளைவு ஒன்றில் முச்சக்கரவண்டி விபத்துக் குள்ளானதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். (ம-7,60)

## கலா ஓயா...

இளைஞனுக்கு முதற்கட்டமாக நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு தனியார் நிதி நிறுவனத்தில் கடமையாற்றிய தனியார் [illegible] (வயது-36) என்ற இளைஞனே உயிரிழந்திருந்தார்.

அவர் பேருந்திலிருந்து காப்பாற்றப்பட்டு கடை ஒன்றின் கூரையிலிருந்து தவறி வெள்ளத்தினுள் விழுந்த நிலையில், துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்தார்.

பேரிடரில் உயிரிழந்தவர்களுக்கு ஒரு மில்லியன் ரூபாய் (10 இலட்சம்) வழங்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதன் அடிப்படையில் உயிரிழந்த பத்மநிகேதன் குடும்பத்தினருக்கு முதல் கட்டமாக ஒரு இலட்சம் ரூபாய் (100,000) வழங்கப்பட்டுள்ளது.

இளைஞனின் மரணச் சான்றிதழ் வழங்கப்பட்டதும் எஞ்சிய 9 இலட்சம் ரூபாய் விரைவில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## வழிபாட்டுத்...

அதற்கமைய வழிபாட்டுத் தலங்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை வழங்கத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதற்குரிய யோசனையை ஜனாதிபதி முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இரு...

50 மெகாவாற் காற்றாலை மின்சார உற்பத்தி நிலையங்கள் இரண்டை நிறுவுவதற்கான ஒப்பந்தத்தை இரு நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-7)

## பேரி...

உரிமவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில், இந்தக் கடன் திட்டத்தின் கீழ் 3 ஆண்டுகளுக்கு நிதி வழங்கப்படும்.

மேலும் அதன் வட்டி விகிதம் 3 சதவீதம் வரை குறைவாக இருக்கும். இந்த கடன் திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக 6 மாதங்கள் சலுகைக்காலம் வழங்கப்படும்.

நுண் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் அதிகபட்ச கடன் தொகை 250,000 ரூபாய் ஆகும்.

சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு வழங்கப்படும் அதிகபட்ச கடன் தொகை ஒரு மில்லியன் ரூபாய் [illegible] (ம-7)

## முன்னாள் சபாநாயகர் பயணித்த ஜீப் விபத்து

பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் சபாநாயகருமான அசோக ரன்வல பயணித்த ஜீப் வண்டி, கார் ஒன்றுடன் மோதி சப்புகஸ்கந்த பகுதியில் நேற்றிரவு 7.45 மணியளவில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் அசோக ரன்வல காயமடைந்துள்ளதுடன் சிகிச்சைக்காக கிரிபத்கொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துக்குள்ளான காரில் பயணித்த பெண்ணும் சிறு குழந்தையும் காயமடைந்துள்ளனர்.

அதற்கமைய பெண் கிரிபத் கொடை வைத்தியசாலையிலும், சிறு குழந்தை சிகிச்சைக்காக ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சப்புகஸ்கந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2025.12.11 — சீட்டிழுப்பு இலக்கம் 6040 — Y 0 6 1 3 0 3
அத சம்பத — Y 1 3 0 3 — சீட்டிழுப்பு இலக்கம் 0615
சுப தவசக் — திகதி 2025.12.11 — சீட்டிழுப்பு இலக்கம் 156 — துலாம் 23 42 51
தன நிதானய — திகதி - 2025.12.11 — சீட்டிழுப்பு இலக்கம் - 2070 — V 22 26 44 73 V
மெகா பவர் — திகதி 11/12/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2388 — V 22 22 39 61 78
ஜய — திகதி 2025.12.11 — சீட்டிழுப்பு இலக்கம் 0308 — O 6 8 6 9
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4282 — சீட்டிழுப்பு திகதி 11.12.2025 — N 29 60 67 68 — N
ஹந்தஹன — சீட்டிழுப்பு திகதி 2025.12.11 — சீட்டிழுப்பு இலக்கம் 1349 — கடகம் 26 28 46 60 கடகம்
சுபதின சம்பத — 11.12.2025 — வெற்றி வாரம் 0748 — T 5 7 4 8 5 2 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.30,261,688.00
SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3014 — சீட்டிழுப்பு திகதி 2025.12.11 — தினம் வியாழக்கிழமை — 03 16 29 57 W — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 80,651,817.60
சனிதா — திகதி 11.12.2025 — வெற்றி வாரம் 5175 — 03 42 52 79 S — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,870,368.80
சசிரி — வெற்றி வாரம் 844 — 11.12.2025 வியாழக்கிழமை — 21 23 31 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
ராசி — சீட்டிழுப்பு வாரம் 4726 — சீட்டிழுப்பு திகதி 11.12.2025 — தினம் வியாழக்கிழமை — 26 36 41 62 துலாம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00
லக்பிம — 2190 — 11.12.2025 வியாழக்கிழமை — Y 27 11 23 24 26 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.612,305,673.00
அட கோடிபதி — வியாழக்கிழமை — வெற்றி வாரம் 2840 — சீட்டிழுப்பு திகதி 2025.12.11 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,138,586.40 — 06 20 23 31 Z


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்தியம்

கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு
குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி | மூலம் | கழுத்து வலி
கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால்,
குதி வலி | Sciatica | Rheumatic Arthritis
நாட்பட்ட சளி | இருதயவலி | வாதம் | வயிற்றுப்புண் |
Gastritis | அல்சர் மிகச்சிறந்த மூலிகை, நம்பிக்கையான
மூலிகை, Acu சிகிச்சைகள் | சிக்கின் குனியாவால்
ஏற்படும் மூட்டு, தசை, பாத வலிகள்

நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669

(6137)

## துப்பரவுத் தொழிலாளர் தேவை

கோண்டாவிலில் உள்ள
கோவில் ஒன்றிற்கு துப்பரவுத்
தொழிலாளர் தேவை.
வயது : 25 – 50

075 759 9546

(6072)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

## Voyzant இந்தியா கோவில்கள்

- ஆறுபடை வீடு
- சிதம்பரம்
- திருவண்ணாமலை
- திருவானைக்கா
- திருப்பதி
- ஸ்ரீரங்கம்
- மதுரை மீனாட்சி
- காஞ்சிகாமாட்சி
- திருநாகேஸ்வரம்
- வைத்தீஸ்வரன்
- திருவெண்ணெய்நல்லூர்
- ராமர்கோவில்
- இராமேஸ்வரம்
- மேல்மருவத்தூர்
- சங்கரப்பாணி
- திருக்கடவூர்

உட்பட 35 இற்கு மேற்பட்ட கோவில்கள்
189,000/= (ஒரு நபருக்கு) (10 பேர் கொண்ட குழு)
இந்தியா விசா, இருவழி பயணச்சீட்டு மற்றும் குளிரூட்டப்பட்ட போக்குவரத்து – தங்குமிடம்
10 நாட்கள்
மேலதிக விபரங்களுக்கு: Voyzant (PVT) Ltd
புறப்படும் திகதிகள் 29.01.2026, 26.02.2026
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். (OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866

(நிபந்தனைகளுக்குட்பட்டது) (C-4492)

## பான்சி கடை வேலைக்கு ஆள் தேவை

பெண்கள் மட்டும்
வேலை நேரம் – 9.00 am to 6.00 pm
ஞாயிற்றுக்கிழமை விடுமுறை
வயது 25 க்கு மேல்
சம்பளம் – 35,000

076 469 0268

(6134)

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3000/- |
| 11-16 Kg | 2400/- |
| 21-22 Kg | 2380/- |

(நிபந்தனைகளுக்குட்பட்டது)

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-4551)

UK 11Kg - 1400/- | France 11Kg - 2180/- | Germany 11Kg - 2030/-
Swiss 11Kg - 2530/- | Australia 11Kg - 2180/- | Italy 11Kg - 2310/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241, 076 822 6237

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் நவக்கிரி மெயின் றோட்டுடன் 38 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- சுன்னாக காபற் வீதி முகப்புடன்
- சுன்னாகம் – புத்தூர் செல்லும் பிரதான காபற் வீதியுடன்
- செம்மண் தரை, நிலப்பரப்பு, குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நிலாவரைக்கிணறு 300 மீற்றர்
- கடைகள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்
- இரண்டு பரப்பாகவும், ஒன்றரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாண பஸ் நிலையம் 10 Km

(6138)

தொடர்பு :
076 860 2770, 076 987 8617

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 08.11.1981 இறப்பு 10.12.2025

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட கல்வியியற்துறையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆ. நித்திலவர்ணன் அவர்களின் துணைவியார்

**அமரர் நிஷாந்தினி நித்திலவர்ணன்**


அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்...
அணி XV ஆசிரிய மாணவர்கள்
கல்வியியல் முதுமாணி கற்கைநெறி,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

(C-4548)

## நினைவுகள் தாங்கிய நெகிழ்வான அஞ்சலி

தகைசால் பேராசிரியர்
**வே.தர்மரட்ணம்**
(முன்னாள் பீடாதிபதி விஞ்ஞான பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)



யாழ்.பல்கலை வீழாதிருக்க ஒரு வேராகி நின்றீர்
ஆழ் நுண்மான் நுழைபுல அறிவால் உறுதுணை செய்தீர்
விஞ்ஞான பீடமதின் விருத்தியே இலக்காகி நற்பணி செய்தீர்!
எஞ்ஞான்றும் உம் நியாயம் மெய்யென மேவும் பணி கொண்டீர்
கணிதமே கண்ணாகி கருத்தான கற்பித்தலால் நினைவாகினீர்
பணியதன் உயர்நிலை கண்டு தகைசால் பேராசிரியராய் நிமிர்ந்தீர்!

உம் கனவான் தனமான நிர்வாகத் திறனும்
எம் மக்கள் என்றெண்ணி செய்த பணியும்
இன்றெம்மை ஏற்றி வைத்தன உயர் படிகளில்
என்றும் மறவோம் எம் இனிய பேராசானே!
உங்கள் ஆத்மா அரணடி ஏகி அடைகவே சாந்தி...

விஞ்ஞானபீட பழைய மாணவர்கள் சங்கம் (FoSAA)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்றெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.